
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 12 டிசம்பர் 2014


தனிப்பிரதி
ரூ.10/-



## HAPPY NEW YEAR

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்.
உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.
(சங்கீதம் 65 : 11)

# புதிய வெளியீடு




மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 1 |
| 2. ஏன் நாங்கள் கிறிஸ்துவின் சபை ... | 9 |
| 3. பெண்கள் பகுதி | 13 |
| 4. வாலிபர் பகுதி | 16 |
| 5. சிறுவர் பகுதி | 19 |
| 6. கிறிஸ்து என்னும் மார்க்கம்... | 21 |
| 7. ஊறுகாயும் தேவபக்தியும் .. | 25 |
| 8. கெட்டுப்போன நல்ல குமாரன்.. | 28 |
| 9. நீ உன் கடமையைச் செய்கிறாயா ? ... | 30 |


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/ அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 27 DECEMBER - 2014 Issue - 12**


ஆசிரியர் உரை

# எப்படி ... என்கிறீர்கள்? எதினாலே... என்கிறீர்கள்

" *எப்படி* ", " *எதினாலே* " என்னும் இவ்விரண்டு வார்த்தைகளும், தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் அறியாததாக இருக்காது. ஏனெனில், இவ்விரண்டு வார்த்தைகளையும் நம் பேச்சு வழக்கில் நாம் அன்றாடம் பயன்படுத்துகிறோம். ஆம், சிறுவர் முதல், பெரியோர் வரை ஏகமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக இவை உள்ளன. சொல்லப் போனால், வாய்பேச முடியாதவர்கள் கூட தங்கள் செய்கைகளின் மூலம் இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துகிறவர்களாக உள்ளனர். அடிப்படையில் இவ்விரண்டு வார்த்தைகளும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் தோன்றினாலும், இவைகளுக்கிடையே பொருளினடிப்படையில் வேறுபாடு இல்லாமலுமில்லை. எப்படியெனில், ஒன்றிற்கான காரணம் தெரியவேண்டிய அளவுக்குத் தெரியாத நிலையில், " *எப்படி* " என்று கேட்கப்படும். அடுத்து, ஒன்றிற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டுமென்பதைத் தெரிந்து கொண்டு, அதை அறிந்துகொள்ளும் விதமாக, " *எதினாலே* " என்று கேட்கப்படும். ஓரளவுக்காகிலும் சரிதானே?

இவ்விரண்டு வார்த்தைகளையும் மல்கியா தீர்க்கனைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார். மற்ற வேதாகம நூல்களிலும் இவ் வார்த்தைகள் ஆங்காங்கே இருந்தாலும், மல்கியா நூலில் இவ்வார்த்தைகள் முற்றிலும் வேறுபட்ட பாணியில் தொனிக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களுடைய ஆன்மீக நிலையைக் கண்ணோக்கி, ஆதங்கப்பட்டு அவர்கள்மீது தேவன் சுமத்தின குற்றச்சாட்டுகளுக்கு, நெஞ்சிலே ஈரமில்லாத இந்த ஜனங்கள் தங்கள் பதிலாக, " *எப்படி* ," " *எதினாலே* " என்னும் இவ்வார்த்தைகளைப் போகிற போக்கில் பயன்படுத்தியுள்ளார்கள்.

சரி, வருடத்தின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கும் நமக்கு இந்த வார்த்தைகள் என்னத்திற்கு என்று நாம் ஒருவேளை எண்ணக்கூடும். கர்த்தர் அனுமதி கொடுத்தால் புதிய வருடத்திற்குள்ளாகச் செல்லக் காத்துக் கொண்டிருக்கும் நமக்கு இவ்வார்த்தைகளைத் தொட்டு சில பாடங்கள் கிடைக்க வாய்ப்பிருப்பதால், இந்த இறுதி மாதத்தில் இத்தலைப்பை தரும் தெரிந்து கொண்டேன். இத்தலைப்பு தரும் பாடங்களை அதிக சிரமமில்லாமல் நாம் கற்றுக்கொள்வதற்கு ஏதுவாக , நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணித் தகவல்களைப் பார்த்து விடுவோம்.

பரிசுத்த வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளுக்கிடையேயான காலம் சுமார் 400 ஆண்டுகள். இக்காலத்தை வேதாகம அறிஞர்கள் " *மௌனகாலம்* " என்று அழைக்கிறார்கள். இக்காலத்தில் தேவன் மனிதர்களோடு எவ்விதத் தொடர்பும் கொள்ளவில்லை. இந்த மௌன காலத்திற்கு முன் கொடுக்கப்பட்ட கடைசி வெளிப்பாடு தான் மல்கியா தீர்க்கனுடைய நூல். இதற்கடுத்து இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகனின் மூலமாக தொடர்புதான் (மல்கியா 3:1; மத் 3;3). மல்கியா தீர்க்கனுடைய நாட்களில் இருந்த ஆன்மிக நிலைதான், தேவன் தன்னுடைய தொடர்பை மனுக்குலத்தோடு தற்காலிமாக அறுத்துக் கொண்டதற்கான காரணமாக இருந்திருக்கலாமோ?

பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரி நூலாகிய மல்கியா, இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனிய சிறையிருப்பகலிருந்து திரும்பி வந்ததற்குப் பிறகு எழுதப்பட்ட ஒன்று. சிறையிருப்பிலிருந்து யெருபாபேல் தலைமையின் கீழ் வந்தவர்கள் ஆகாய் மற்றும் சகரியா போன்ற தீர்க்கதரிசிகள் கொடுத்த போதனை ஊக்கத்தால் எருசலேம் தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினர் (கி.மு. 520 -516). பிறகு, நெகேமியாவின் தலைமையின் கீழ் வந்தவர்களால் எருசலேமின் அலங்கம் கட்டப்பட்டது (கி.மு. 450). இந்த நெகேமியாவின் நாட்களில் தான் இந்நூலும் எழுதப்பட்டுள்ளது. இச்சமயத்தில், சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்து கிட்டதட்ட ஒரு நூறு ஆண்டுகள் ஆகிவிட்டது. பாபிலோனிய சிறையிருப்பின் பாடுகளை அறியாத புதிய தலைமுறை தேசத்தில் இருந்தது. இச்சந்தததிக்கு பாபிலோனிய சிறையிருபுக்குச் சென்றதற்கான காரணமும். அங்கிருந்து தேவன் விடுதலையாக்கின விதமும் தெரியாது. விளைவு? தேவக்காரியங்களிலும், பக்தி ரீதியிலும் பெரும் வீழ்ச்சி.

ஆம், ஆசாரியர்களின் இழிவான ஆன்மீக சேவை, ஒட்டு மொத்த தேவாலயப் பணிகளில் பங்கம் படைக்கப்பட்ட பலிகளில் அலட்சியம், கொடுக்கப்பட்ட காணிக்கைகளில் வஞ்சனை. தேவ அன்பு மற்றும் நீதியைப் பற்றிய சந்தேகம். தேவ செயல்பாடு பற்றிய மனக்குறை என்று எல்லாவற்றிலும் எக்குத்தப்பான மனநிலை. பாபிலோனிய சிறையிருப்பின் அனுபவம், தேவன் எதிர்பார்த்த எந்த நன்மையையும் இவர்களுக்கு அளிக்கவில்லை. இப்படிக் கெட்டுப்போன மனநிலையிலிருந்தவர்களுக்குத்தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல், பவுலடியாரின் ரோமாபுரி நிருபத்தின் வாடையை நாம்

காணமுடியும். அதாவது, கேள்வி, பதில் பாணியை பவுலடியாரைப் போன்று மல்கியாவும் கடைப்பிடித்துள்ளார். தேவனுக்கடுத்த காரியங்கள் பய பக்தியுடனும், முழுமனதுடனும் இருக்க வேண்டுமென்ற தேவ எதிர்பார்ப்பு இதில் பலமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இப்பொழுது மல்கியா நூலின் முதல் அதிகாரத்தில் காணப்படும் " *எப்படி*", " *எதினாலே* " என்னும் வார்த்தைகளைக் கொண்டு, நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று கவனிப்போம்.

**I. எங்களை எப்படிச் சிநேகித்தீர்?** (வசனம் 2)

மல்கிய தீர்க்கனுடைய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் மீது தேவன் சுமத்தின குற்றச்சாட்டுகளுக்கான பதில்களில் முதலாவது வருவது, "*நீர் எங்களை எப்படிச் சிநேகித்தீர்?* " என்பது.

மல்கியா நூலின் ஆரம்பமே நான் உங்களைச் சிநேகித்தேன் என்பதே. வேறெந்த வேதாகம நூலிலும் இது போன்ற ஆரம்பம் இல்லை. சிநேகித்தேன் என்று கர்த்தார் சொல்லுவதின் பொருள், மூன்று காலங்களையும் உள்ள டக்கியது. அதாவது, சிநேகித்தேன், சிநேகிக்கிறேன், இனியும் சிநேகிப்பேன் என்பது. தேவன் இப்படிச் சொல்லும்போது, பக்தி நிலையில் பாழாய்ப் போன இந்த ஜனங்கள், எங்களை எப்படிச் சிநேகித்தீர்? என்று தேவனைப் பார்த்து கேள்வி எழுப்பினார்கள். இது எப்படி இருக்கு? தேவன் இவர்களைச் சிநேகிக்க வில்லையாம்!

இவர்களின் பதில் எரிச்சலூட்டுவதாக இருந்தாலும், தேவன் மிகவும் பொறுமையோடு இஸ்ரவேலைத் தான் எப்படிச் சிநேகித்தேன் என்று இவ்விதம் விளக்கம் கொடுக்கிறார். " *ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவா? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன், ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத் திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன் என்று* "(1:2,3). அன்று தொடங்கிய தேவ அன்பு இஸ்ரவேல் சரித்திரத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பரிமளித்து வந்துள்ளதை பழைய ஏற்பாட்டின் பக்கங்களில் காணமுடியும்.

அவர்களுக்கான தேவ சிநேகத்தின் கடைசி அடையாளம் தான் அவர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தது. தேவக்கரம் இவர்களோடு இல்லாமலிருந்திருக்குமானால் பாபிலோனிலிருந்து இவர்கள் திரும்பியிருக்க முடியுமா? விடுதலையாகி வந்து தங்களுக்காகத் தேசத்தையும், நிலங்களையும், வீடுகளையும் பெற்றுக்கொண்டிருக்க முடியுமா? கண்டிப்பாக, தேவ சிநேகம் தான் இதற்கு காரணம். ஆனாலும், ஆன்மீகத்தில் அழுகிக் கொண்டிருந்த இந்த ஜனங்கள், எங்களை எப்படிச் சிநேகித்தீர்? என்று தேவனைப் பார்த்துக் கேட்டு அவரை நோகடித்தார்கள்.

இன்றைக்கும் கூட அநேகர் மல்கியா காலத்து இந்த இஸ்ரவேல் ஜனங் களைப் போல் தேவ அன்பைப் பற்றிய அறிவில்லாமல் வாழ்ந்து கொண்டுள் ளார்கள். தேவன் உலகத்து மக்கள் எல்லாரிலும் அன்பு கூருகிறார் என்பதையும்,

அவர்தான் எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கிறார் என்பதையும் பவுலடியார் புகழ்பெற்ற மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் இப்படியாக வெளிப் படுத்தியுள்ளார். " *எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிறவர் கர்த்தர்* " என்றும் (அப். 17:28), " *அவருக்குள் தான் நாம் பிழைக் கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்* " (அப். 17:25) என்று தேவன் நம்மைச் சிநேகித்து எல்லாவற்றையும் நமக்குத் கொடுக்கிறார் என்பதற்கு இது ஒரு பலமான சான்று.

இது மட்டுமா? இல்லை, இன்னும் இருக்கிறது. ஆம், மானிடத்தின் மீதான தேவ அன்பிற்கு முத்தாய்ப்பாக இருப்பது யோவான் 3:16. "*தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* ". இவ்வசனத்தில் "*இவ்வளவாய்*" என்று பார்க்கிறோம். இவ்வளவாய் என்றால், அது எவ்வளவாய்? இயேசு கிறிஸ்துவின் வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பது போல (ஏசாயா 53:8). தேவனுடைய இந்த அன்பையும் யாராலே சொல்ல முடியும்? நித்திய காலமெல்லாம் தம்மோடிருந்த ஒரே பேறான குமாரனையே நமக்காகத் தந்தாரே! இந்த மகத்தான தேவ அன்பை, வார்த்தைகளைக் கொண்டு வர்ணிக்க முடியுமா? அப்படி வர்ணிப்பதற்கு மாந்த அறிவு போதுமானதாகத் தான் இருக்குமா?

அருமையானவர்களே, இப்படிப்பட்ட தேவ அன்பை நம்மில் எத்தனை பேர் அங்கீகரித்து, இந்த அன்பிற்கு அடிபணிந்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள். வருடத்தின் இறுதியில் நின்று கொண்டிருக்கும் நாம் சிந்திக்க வேண்டிய நேரமிது. தேவ அன்பை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதற்கான விளக்கம் என்னவென்று தெரியுமா? யோவான் அப்போஸ்தலன் இதுகுறித்து எழுதியிருப்பதைத் தயவு கூர்ந்து கவனியுங்கள். " *அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்* " (1 யோவான் 2:8). புரிகிறதா? நம்மிடத்திலான தேவ அன்பிற்கு அடையாளம் என்னவென்று தெரிகிறதா? அப்படியானால், அவருடைய வசனத்திற்கு நம் வாழ்க்கையில் நாம் எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து வருகிறோம்?

நம்முடைய பக்திக் காரியங்களில், தேவனுடைய வார்த்தைகள் என்ன சொல்லுகிறதென்பதற்கு எவ்வித முக்கியத்துவம் தராமல் மாம்சமும், மனசும் என்ன சொல்லுகிறதென்றும், ஊரும், உலகமும் என்ன எதிர்பார்க்கிறதென்றும் பார்த்து அதன்படி நாம் வாழ்கிறவர்களாக இருந்தால், தம்முடைய ஒரே பேறான தேவ அன்பை நாம் அங்கீகரித்து, ஏற்றுக் கொள்ளாதவர்களாகவே காணப் படுவோம். அதுமாத்திரமல்ல, நம்மைச் சிநேகிக்கும் தேவனைப் பார்த்து, " *நீர் எங்களை எப்படிச் சிநேகித்தீர்?* " என்று கேட்டு அவரைத் துக்கப்படுத்தாதவர் களாகவும் இருப்போம். என்ன செய்யப் போகிறோம்? நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

## II. உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம்? (வசனம் 6)

மல்கியா தீர்க்கனுடைய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் மீது தேவன் சுமத்தின குற்றச்சாட்டுகளுக்கான பதில்களில் இரண்டாவதாக வருவது, "*உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம்?*" என்பது.

தேவனுடைய இந்தக் குற்றச்சாட்டு இஸ்ரவேலில் இருந்த ஆசாரியர்கள் மீதானது. தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே நின்று தேவனுடைய ஆலயத்தில் பணிபுரிகிறவர்கள தான் ஆசாரியர்கள். இவர்கள் தேவ காரியங்களை மதித்து, தங்கள் நீதியான பணிவிடைகள் மூலம் தேவ நாமத்தைக் கனப்படுத்த வேண்டியவர்கள். அசட்டை என்பதின் பொருள், " *மேன்மையான ஒன்றை இழிவாகக் கருதுவது* ". ஆம், அந்நாட்களில் ஜனங்களைப் பக்திக் காரியங்களில் வழிநடத்தும்படியான நிலையிலிருந்த ஆசாரியர்களுக்கு தேவ காரியங்கள் இழிவானவைகளாகவே காணப்பட்டது.

இவர்களைப் பற்றிய தேவ குமுறலைப் பாருங்கள். " *குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவனால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டை பண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைப் பார்த்துக் கேட்கிறார்; அதற்கு நீங்கள் உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம் என்கிறீர்கள்*" செய்வதையும் மனசாட்சியில்லாமல் செய்துவிட்டு, சுட்டிக்காட்டும் போது ஒன்றும் தெரியாததுபோல் பாசாங்கு காட்டுவது இவர்களுக்கு வாடிக்கை. இது மிகவும் அபாயகரமான போக்கு. ஆனால், அதுதான் அன்றைய நாளின் யதார்த்தம். யெகோவா தேவன் அவர்களுக்குத் தகப்பனாகவும், எஜமானாகவும் இருந்து சகல காரியங்களையும் நடப்பித்து வந்துள்ளார். ஆனாலும், அவருடைய நாமத்தை அசட்டை பண்ணியிருக்கிறார்கள்.

மேன்மையான ஒன்றை அசட்டையாக எண்ணுவதற்கான மிகச் சிறந்த உதாரணம் ஏசா தான். முற்பிதாக்களில் இரண்டாமவரான ஈசாக்கின் இரட்டைப் பிள்ளைகளில் முதலில் வந்தவன் தான் இந்த ஏசா. அசட்டை என்ற வார்த்தையைத் தன் ஈனச் செயலால் உலகிற்கு அறிமுகம் செய்தவன் இவன்தான். "*ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை அலட்சியம் பண்ணினான்*" என்று தேவன் கூறியுள்ளார் (ஆதி. 25:34). சேஷ்ட புத்திரம் என்பது ஒருவனுடைய பிறப்பின் மூலம் கிடைக்கும் சட்டப்பூர்வமான உரிமை. இது குடும்பங்களில் பிறக்கும் தலைப்பிள்ளைகளுக்குரியது. அடுத்து பிறப்பவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தாலும் இந்த உரிமையைக் கோர முடியாது. பழைய ஏற்பாட்டின் நாட்களில் இது மிகுந்த சிறப்புக்கும், கனத்திற்கு முரியது. தகப்பனுடைய ஆஸ்திகளில் இரண்டு பங்கு இவர்களுக்குத் தானாக வந்து சேரும் (உபா. 21:15-17). அது மாத்திரமல்லாமல், சட்டப்படி தகப்பனுடைய ஸ்தானமும் இவர்களுக்குத்தான் கிடைக்கும் (2 நாளா. 21:3). இவ்வளவு சிலாக்கியத்திற்குரியதை அவன் அசட்டை பண்ணினான்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக இவன் செயலால் மனம் வெதும்பின தேவன், அதை மறக்க முடியாமல் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு மீண்டும் இப்படியாக நினைவுபடுத்துகிறார். " *ஒருவனும் வேசிக் கள்ளனாகவும், ஒருவேளை போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்*" என்று (எபி. 12:16). அசட்டைக்காரனாகிய ஏசாவை தேவ ஆவியானவர் இரண்டு கடும் வார்த்தைகளால் அர்ச்சித்துள்ளார். வேசிக் கள்ளன் என்றும், சீர்கெட்டவன் என்றும், அசட்டை தேவ சமூகத்தில் எப்படிப் பார்க்கப்படுகிறதென்பதற்கு இது போதாதா? சொல்லுங்கள்.

அருமையானவர்களே, தேவ காரியங்களை அசட்டை செய்கிற காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம். நான் பிதாவானால் என் கனம் எங்கே? என்று மல்கிய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலைப் பார்த்து தேவன் கேட்டுள்ளாரே. இதன் பொருள் என்னைப் பிதா என்று வெறும் வாயிலே மாத்திரம் சொன்னால் போதாது, அதற்கான கனம் வேண்டுமென்பது தானே. இதே கருத்தைத் தான் நம் இரட்சகர் இயேசு, தன் நாட்களில் தன்னைப் பின்பற்றி வந்தவர்களிடம் இவ்விதம் பிரதிபலித்துள்ளார். " *என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?* " என்று. (லூக்கா 6:46) கனம் என்பது வார்த்தைகளிலில்லாமல், பக்தி நடக்கைகளில் இருக்க வேண்டுமென்பது தானே எதிர்பார்ப்பாக உள்ளது.

அப்படியானால், நம்முடைய நடக்கையின் மூலம், தேவனையும், குமாரனையும் கனப்படுத்துகிறவர்களாக உள்ளோமா? யெகோவா தேவனும், அவருடைய குமாரன் இயேசுவும் பழைய, புதிய ஏற்பாடுகளில் வெளிப்படுத்தி யுள்ளவைகளின்படி மாத்திரம் செய்து வருகிறோமா? நாம் தேவனுக்குப் பயந்து, அவரைக் கனப்படுத்துவதற்கு வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டவை களுக்கு மாத்திரம் நம்மைக் கட்டுப்படுத்துவது அவசியம். ஆனால், இன்றைய கிறிஸ்தவர்களைக் கவனிக்கும் போது, அசட்டைக்காரனாகிய ஏசா தான் நம் கண் முன் தோன்றுகிறான். பாரம்பரியம் என்ற பெயரிலும், பண்டிகைக் கொண்டாட்டங்கள் என்ற பெயரிலும், பெரும்பான்மையோரின் ஆதரவு என்ற பெயரிலும் மேன்மையான தேவ காரியங்கள் அசட்டை செய்யப்பட்டு, அற்பமான காரியங்கள் மிடுக்காக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

பரலோகத்தின் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுடனான தொடர்பைத் துண்டித்து, அவர்களை விட்டு விலகி மௌனம் காத்ததற்கான காரணங்களில் ஒன்று அவர்களின் அசட்டை குணம். வரக்கூடிய ஆண்டில் தேவன் நம்மோடு கூட இருக்க வேண்டுமானால், அசட்டை குணத்தைத் தவிர்த்து தேவனுக்குப் பயந்து எல்லா நிலைகளிலும் அவரை கனப்படுத்துவோம்!

### III. உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம்? (வசனம் 7)

மல்கியா தீர்க்கனுடைய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் மீது தேவன் சுமத்தின குற்றச்சாட்டுகளில் அடுத்ததாக வருவது. "*உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம்?* " என்பது.

மாய்மாலக்காரர்களாகிய இந்த ஜனங்களுக்கு " *எப்படி* ", "*எதினாலே* " என்னும் வார்த்தைகள் நுனி நாக்கிலேயே தொங்கிக் கொண்டிருந்திருக்கும் போல் தெரிகிறது. தேவன் இவர்கள் மீது ஏதோ பொய்யாய்க் குற்றம் சாட்டுவது போல், இந்த வார்த்தைகளை எவ்வித தயக்கமுமின்றி அவிழ்த்து விட்டிருக் கிறார்கள். இதன் மூலம், மற்ற பாவங்களோடு, " *வார்த்தைகளாலே தேவனை வருத்தப்படுத்துகிற* " (மல். 2:17) பாவத்தையும் கூட்டிக் கொண்டார்கள். எப்படி யிருந்திருக்கும் தேவனுக்கு என்று எண்ணிப் பாருங்கள்.

அவருடைய பீடத்தின் மீது அசுத்தமானதைப் படைத்துவிட்டு, எதினாலே உம்மை அசுத்தப்படுத்தினோம் என்று கேள்வி வேறு கேட்டிருக் கிறார்கள் (மல். 1:7) இதனால், அசட்டையோடு அசுத்தமும் சேர்ந்து கொண்டது. அசுத்தம் என்பது "*சுத்தமானதைக் களங்கப்படுத்துவது*". அப்படியானால், இவர்கள் எதைக் களங்கப்படுத்தியிருக்கிறார்கள்? பலிபீடத்தின் மேல் அசுத்தமான அப்பங்களைப் படைப்பதன் மூலம் களங்கப்படுத்தியிருக்கிறார்கள். புதிதாகப் பிசைந்த மாவைக் கொண்டு அப்பங்களைச் செய்யாமல், குப்பைத் தொட்டியில் போடுவதற்கு லாயக்கானவைகளைக் கொண்டு செய்திருப்பார்களோ? யாருக்குத் தெரியும்? தேவன் அசுத்தமென்று சொன்னதோடு நிறுத்திக் கொண்டார்.

அதுமாத்திரமல்ல, பலியிடுகிற காரியத்திலும் பொல்லாப்பை நடப்பித் திருக்கிறார்கள். பலியிடுவதற்கு ஏற்றவை மந்தையில் தலையீற்றானதும், பழுதற்றதுமாயிருப்பவையே (லேவி. 22:17-22). மோசேயின் இப்பிரமாணம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆயினும், ஊனமானதையும், நசல் கொண்ட தையும் மிருகங்களால் பீறுண்டதையும், அவர்கள் சாப்பிடுவதற்கு ஆகாதவை களுமாயிருந்தவைகளைக் கொண்டு பலி செலுத்தியிருக்கிறார்கள் (மல். 1:13). இப்படி ஈனமானதை உன் அதிபதிக்குச் செலுத்தினால் அவன் உன் மேல் பிரியமாயிருப்பானோ? என்று இன்னுமொரு கேள்வியின் மூலம் அவர்களின் மனச்சாட்சியை உலுக்கினார். ஆயினும், அவர்கள் அசையவில்லை ஆளும் அதிபதியை விட சர்வ வல்ல தேவன் அவர்களுக்கு கேவலமாய்க் காணப் பட்டிருக்கிறார்.


இச்செயல்கள் மூலமாக ஆசாரியர்கள் தேவனுக்கான ஆராதனை யைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியிருக்கிறார்கள். தேவன், பலியிடுவதற்கான, ஆராதிப்பதற்கான சட்டதிட்டங்களைக் கொடுத்திருந்தார். ஆனால், அவர்கள் சட்ட திட்டங்கள் முக்கியமல்ல, பலி செலுத்துவதும், ஆராதிப்பதுமே முக்கிய மன்று எண்ணினதோடு, இவைகளைத் தங்கள் விருப்பம் போல் செய்து கொள்ளலாமென்றும் எண்ணிக்கொண்டார்கள். அதன் விளைவுதான்.

தாறுமாறான செயல்பாடுகள். தேவனுக்கான காரியங்களில் தங்கள் மன விருப்பம் போல் செய்ய எந்த ஒரு மனிதனுக்கும் அதிகாரமில்லை. அவன் ஆசாரியனாக இருந்தாலும் சரி, அதிபதியாக இருந்தாலும் சரி, சொன்னபடி செய்து விட்டுப்போக வேண்டியதுதான். மீறிச் செய்கிறவர்களைத் தேவன் எப்படிப் பார்க்கிறார் என்று இவ்வசனத்தின் மூலம் கவனியுங்கள். "*தன் மந்தையில் கடா இருக்கையில், கெட்டுப் போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன், சபிக்கப்பட்டன்...*" ஏமாற்றக்காரனாகவும், சபிக்கப்பட்டவனாகவும் இருப்பதற்கா பலி செலுத்தி ஆராதிப்பது! இல்லவே இல்லை. ஏமாற்றும், சாபமும் வேண்டவே வேண்டாம்.

அருமையானவர்களே, மல்கியாவின் நாட்களில் தேவனுடைய ஆராதனைக்கேற்றவைகள் சரியாக இருக்க வேண்டியது அவசியமானால், அது இன்றைக்கும் அவசியம் தானே! பழைய ஏற்பாட்டில் பலி செலுத்து வதற்கும், ஆராதிப்பதற்கும் சட்ட திட்டங்களைக் கொடுத்த தேவன் புதிய ஏற்பாட்டிலும் கொடுத்துள்ளார் தானே! ஆம், ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்கவேண்டுமென்று சொல்லியுள்ளாரே. (யோவான் 4:24) அப்படி யானால் நம்முடைய ஆராதனை இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட சட்ட திட்டங்களின்படியாகத்தான் உள்ளதா? சொல்லுங்கள். ஆவி என்பது " *சரியான மனநிலையையும்* ", உண்மை என்பது, " *வெளிப் படுத்தப்பட்டுள்ள சத்தியத்தையும்* " குறிப்பதாக உள்ளது. இப்படித்தான் ஆராதனை இருக்க வேண்டும். ஆகவே, மன விருப்பம்போல் செய்துவிட்டு, "*எப்படி*" என்றும் "*எதினாலே*" என்றும் கேட்கிறவர்களாக இருக்க வேண்டாம். ஏனென்றால், அவருடைய நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கிறது. அதுமாத்திரமல்ல, அவர் மகத்துவமான ராஜாவாயிருக்கிறார். (1:14).

ஆகையால், எதிர்வரும் புதிய ஆண்டில், தேவன் நம்மை விட்டு விலகாமல், அவருக்கு உகந்தவர்களாகவும், ஆசீர்வாதத்தின் மக்களாகவும் வாழ்வதற்கு மேற்கண்ட பாடங்களை ஏற்று வாழ்வோமாக! ஆமென் !!. ❋

## புதிய ஆண்டில்



*உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி "திருமறை ஆசான்" மற்றும் "திருமறை தியானம்" குடும்பத்தின் சார்பாக வாழ்த்துகிறேன்.*

**அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

# ஏன் நாங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாயிருக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

"சபை" என்னும் வார்த்தை " எக்லீசியா" என்ற கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. இதன் பொருள், "அழைக்கப்பட்டவர்கள் " என்பதாகும். இங்கே கிறிஸ்து தம்மைப் பின்பற்றும்படி மக்களை உலகத்திலிருந்து வெளியே அழைத்திருக்கிறார். இயேசு தம்முடைய சீஷர்கள் பற்றிச் சொல்லும் போது, " *நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது என்று சொன்னார்*" (யோவான் 17:14). இயேசுவானவர் பிடிக்கப்பட்டு, விசாரிக்கப் பட்டு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னார். "*என் ராஜ்யம் இவ்வுலகத் திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால், நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப் பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்* " (யோவான் 18:36). இங்கே இயேசு பேசுகின்ற ராஜ்யம், சபையாகிய ராஜ்ஜியம். அப்போது சபை தோற்றுவிக்கப்படவில்லை. ஆனாலும், சபையாகிய ராஜ்யம் சமீபமாயிருந்தது.

வேதாகமத்தில் "சபை" என்பது உள்ளூர் அளவில் பேசப்பட்டுள்ளது. உதாரணமாக, கொரிந்து சபை (I கொரி. 1:2), தெசலோனிக்கே சபை (I தெச. 1:1) என்று இப்படி பல சபைகள் உண்டு. மற்றும், சபையானது உலகளாவிய அளவிலும் பேசப்பட்டிருக்கிறது. இந்தக் காரியத்தில் எல்லா உள்ளூர் அல்லது பிராந்திய சபைகள் சேர்ந்து ஒரு சபையாகிறது. அதாவது, கிறிஸ்துவின் சபையாகிறது (மத்தேயு 16:18; ரோமர் 16:16). நிச்சயமாகவே, உள்ளூர் சபையாக இருந்தாலும் சரி, உலகளாவிய சபையாக இருந்தாலும் சரி, சபை ஒன்று தான்; அது கிறிஸ்துவினுடையது. ஏனெனில், அது கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறது.

கிறிஸ்துவின் சபையானது வேதவாக்கியங்களில் தேவனுடைய ராஜ்யமாகவும் (லூக்கா 21:31), கிறிஸ்துவின் ராஜ்யமாகவும் (எபே. 5:5), பரலோக ராஜ்யமாகவும் (மத்தேயு 5:19), தேவனுடைய சபையாகவும் (அப். 20:28), கிறிஸ்துவின் சபையாகவும், (ரோமர் 16:16), கிறிஸ்துவின் சரீரமாகவும் (I கொரி. 12:27), தேவனுடைய வீடாகவும் (I தீமோ. 3:15) பேசப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை, சபையை கிறிஸ்துவின்

மணவாட்டியாகவும் (யோவான் 3:29), மந்தை என்றும் (யோவான் 10:1-18) பேசுகிறது. வேறுவிதமாகச் சொன்னால் சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது (I கொரி. 12), சபையானது கிறிஸ்தவர் களால் ஆனது (அப். 11:26) சபை இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கியது (அப். 2:47).

வேதவாக்கியங்களில் நீங்கள் வாசிக்கக்கூடிய ஒரே சபை கிறிஸ்துவின் சபை மாத்திரம் தான். மனிதனால் உண்டாக்கப்பட்ட அநேக போலி சபைகள் இன்று உலகில் இருக்கின்றன. ஆனால், மெய்யான சபை ஒன்றே ஒன்று தான் இருக்கிறது.

இப்போது நானும், என் சகோதரர்களும் வேறு சபைகளில் அங்கமாக இல்லாமல் கிறிஸ்துவின் சபையில் ஏன் அங்கத்தினர்களாக இருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருப்பதற்குக் காரணம் இச்சபை பற்றி தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ராஜ்யம் அல்லது வீட்டை எருசலேமில் ஸ்தாபிப்பார் என்று ஏசாயா சொன்னார் (ஏசாயா 2:1-3). அது வல்லமையுடன் வருவதாக யோவேல் சொன்னார் (யோவேல் 2:28,29). அது ஒருபோதும் அழிக்கப் படாமல் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று தானியேல் கூறியுள்ளார் (தானியேல் 2:44). அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி, அந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் சபை ஸ்தாபிக்கப்பட்ட போது நிறைவேறின.

கிறிஸ்து சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணினபடி யால் நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறோம். கிறிஸ்து, அந்நாட்களில் அதாவது, முதல் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டி ருந்த சிலருடைய வாழ்நாளிலேயே ராஜ்யம் பலத்தோடே வருமென்று சொன்னார் (மாற்கு 9:1). மறுபடியும், அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்த பின்பு இப்படிக் கூறினார். "*மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை*" (மத்தேயு 16:18). அப்போது சபை இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆயினும், இயேசு இந்த வார்த்தைகளைச் சொன்ன பிறகு குறுகிய காலத்திலேயே சபை ஆரம்பிக்கப்படவிருந்தது. ஒருவர் வேறு ஏதாவது சபையில் அங்கமாக இருந்தால், கிறிஸ்து தான் கட்டுவேன் என்று சொன்ன சபையைக் காட்டிலும் சிறந்ததொரு சபையை ஒருவனால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?.

எருசலேம் பட்டணத்தில், கி.பி. 33 ல் சபையானது ஸ்தாபிக்கப்பட்ட படியால் நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கி றோம். தீர்க்கதரிசனங்களில் பேசப்பட்டு கிறிஸ்துவால் வாக்களிக்கப்பட்ட

ஒரே சபை கிறிஸ்துவின் சபை தான். யூதர்களின் பண்டிகையான பெந்தெ கொஸ்தே நாளில் உலகின் பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்து எருசலேமுக்கு வந்திருந்தார்கள். சபையை ஏற்படுத்தும் ஒரு நாளாக கர்த்தர் அந்த நாளைத் தெரிந்து கொண்டார். அந்த நாளில் தான் பரிசுத்த ஆவி அப்போஸ் தலர்கள் மீது ஊற்றப்பட்டு, அவர்கள் தேவமனிதர்கள் என மற்றவர்கள் நம்பும்படியாக அந்நிய பாஷைகளில் பேசினார்கள். மற்றும் அற்புத அடை யாளங்களைச் செய்தார்கள். பிறகு, அவர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கித்த பின் ஏறக்குறைய மூவாயிரம் பேர் கிறிஸ்துவை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்பைப் பெறும்படியாய் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தார்கள்; பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றுக் கொண்டார் கள். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார் என்று வேதவசனம் சொல்கிறது. இவைகள் எல்லாமே அப்போஸ்தலருடைய புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிச் சொல்லப்பட்டிருக்கும் யாவும் உண்மை யாக இருக்கிறபடியால், கி.பி.33-ல் எருசலேமில் தொடங்கப்படாத, இப்போது நூற்றுக்கணக்கில் இருக்கிற எந்த ஒரு சபையும் கர்த்தருடைய சபையாக இருக்க முடியாது. இந்தக் காரியத்தில் எங்களுடைய சபை மட்டும் தான் கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபை என்று நாங்கள் சொல்லுகிறதாக ஒரு வேளை நீங்கள் சொல்லலாம். இல்லை, நான் இங்கே எங்களுடைய சபை யைப் பற்றி பேசவில்லை.

கிறிஸ்துவின் மீது சபை கட்டப்பட்டிருக்கிறபடியால், நாங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாயிருக்கிறோம். பேதுருவும், அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தபோது, இந்தக் கல்லின் மீது, அதாவது, "*தேவனுடைய குமாரன் என்கின்ற உண்மை மீது*", சபையைக் கட்டுவதாக இயேசு சொன்னார் (மத்தேயு 16:18). அந்த உண்மையின் மீது தான் சபை இன்றளவும் இருந்து வருகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் இல்லை என நிரூபிக்கப்பட்டிருந்தால் சபை எப்போதோ இல்லாமல் போயிருந் திருக்கும். எனவே தான், பவுல் இப்படிச் சொல்கிறார் "*போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்தி பாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது*" என்று (I கொரி. 3:11). பேதுரு கிறிஸ்துவை அந்த அஸ்திபாரத்தின் மூலைக்கல் என்று விவரிக்கிறார் (I பேதுரு 2:4-8). கிறிஸ்து அல்லாத வேறெந்த அஸ்திபாரமும் நிலைத்திராது (மத்தேயு 7:24-27). சபையானது, கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டிருக்கிற படியால் சபை சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது (I தீமோ. 3:15). அதாவது, சபையானது கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டிருக்கிறபடியால் சபை சத்தியத்தை தாங்கக் கூடியதாக அல்லது சத்தியத்தை உலகிற்கு பறை சாற்றக்கூடியதாக இருக்கிறது.

சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கிற படியால், நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறோம். பவுல் எபேசு சபையின் மூப்பர்களிடம் இப்படிச் சொல்கிறார், "*ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண் காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையா யிருங்கள்*" (அப். 20:28). கிறிஸ்து சபைக்காக மரிக்க முன் வந்ததினாலும், தம்முடைய இரத்தத்தை சபைக்காகச் சிந்தினபடியாலும் சபை மிகவும் முக்கியமானதென்பது இதன் மூலம் உறுதியாகிறது.

கிறிஸ்துவின் சபை, கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிறபடியால் நாங்கள் அந்த சபையின் அங்கத்தினர்களாயிருக்கிறோம். கிறிஸ்து, சபை தன்னுடையது என்று சொல்லியிருக்கிறார். அவரே சரீரமாகிய சபைக்கு இரட்சகராயிருக்கிறார் (மத்தேயு 16:18; எபே. 5:23). இது உண்மையாயி ருக்கிறபடியால், சபை கிறிஸ்துவுக்குச் சொந்தம் என்பது தெளிவாகிறது. ஒருவர் ஓர் உடைமைக்கு சொந்தக்காரர் என்றால், அது அவருடைய பெயரில் தான் இருக்கும். வேதவாக்கியங்களில் இதற்கான அடையாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கிறிஸ்துவின் சபையார் (ரோமர் 16:16) கிறிஸ்துவின் சரீரம் (I கொரி. 12:27), தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யம் (கொலோ. 1:13) என்று இப்படி இவைகள் எல்லாமே கிறிஸ்துவின் சபையைத்தான் குறிக்கின்றன. அது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டிருக்கும் எல்லா அங்கத்தினர்களும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் (அப். 11:26; I பேதுரு 4:16). பேதுரு கிறிஸ்துவின் நாமத்தில் தான் இரட்சிப்பு இருக்கிறது என்று அறிவித்தார் (அப். 4:12).

கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறபடியால் நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறோம் (எபே. 5:23), அவரே சபைக்குத் தலையாயிருக்கிறார் (கொலோ. 1:18). ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபை யில் நாம் அங்கத்தினர்களாயிருக்க வேண்டும் (எபே. 4:4; எபே. 1:22,23).

இப்படிப்பட்ட சபையில் நீங்கள் அங்கத்தினராக இருக்கிறீர்களா? அல்லது வேறு ஏதாவது சபையில் அங்கத்தினராக இருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு சபை தான் உண்டு என்பதை மனதில் வையுங்கள். ஆகவே, இந்த ஒரே சபையில் நீங்கள் பிரவேசிப்பது அவசியமாயிருக் கிறது. நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப். 2:38,47) சபை இரட்சிப்பதில்லை. ஆனால், கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார். ஆதலால், நாம் இரட்சிக்கப்படவும், கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்தவும் இந்த சபையில் நாம் அங்கத்தினர்களாக இருக்க வேண்டுவது அவசியம். கடைசியாக, கர்த்தர் ஒரு நாளில் திரும்ப வந்து இந்த சபையை ஏற்றுக்கொண்டு இதை பரலோகத்திற்கு எடுத்துச் செல்வார்.

பெண்கள் பகுதி

# அக்சாள்

Sis. R. R. NAYAGAM

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர யாத்திரையை முடித்துக் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்வதற்கு முன்பாக அத்தேசத்தை வேவு பார்த்து வந்து நல்ல பதிலைக் கூறியவர்கள் யோசுவாவும், காலேபும் தான். காலேப் மிகவும் மன உறுதியுள்ளவன். வேதாகமம் அவனைப் பற்றிக் கூறும் போது, " என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும் உத்தமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனைச் சேர பண்ணுவேன். அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் " (எண். 14:24) என்கிறது. தேவனை உதமமாய் பின்பற்றின காலேபுக்கு அக்சாள் என்று ஒரு மகள் இருந்தாள். அவளை ஒத்னியேல் என்பவனுக்கு திருமணம் முடித்துக் கொடுத்திருந்தான் காலேப். இஸ்ரவேலில் நியாயாதி பதிகளின் பட்டியலில் ஒத்னியேல் முதல் நிற்கிறான்.

திருமணம் முடிந்து தன் கணவன் வீட்டிற்குப் போகும் முன் அக்சாளுக்கு வெகுமதியாக காலேப் நிலங்களைக் கொடுத்திருந்தான். அவள் புறப்படும் பொழுது தன் தகப்பனிடத்தில் மீண்டும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள். இச்சம்பவம் நியாயாதிபதிகளின் புத்தகம் முதலாம் அதிகாரம் 14,15 ஆகிய வசனப் பகுதி களில் காணப்படுகிறது. " அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியை கேட்கவேண்டுமென்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு, கழுதையின் மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி; உனக்கு என்ன வேண்டும் என்றாள். அப்பொழுது அவள், எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும். வறட்சியான நிலத்தை எனக்கு தந்தீர். நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தர வேண்டும் என்றாள். அப்பொழுது காலேப், மேற்புறத்திலும், கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப் பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான் ".

மேற்கண்ட சம்பவத்திலிருந்து அக்சாள் மூலமாக நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

## I. அக்சாள் தன்னைத் தாழ்த்தினாள்

தன் தகப்பனிடம் ஆசீர்வாதத்தைப் பெற நினைத்தாள். ஆனால், கழுதையின் மேல் அமர்ந்தவாறே கேட்க விரும்பவில்லை. நான் விரும்பியதைப் பெற்றுக்கொள்ள முதலாவது, தன்னுடைய நிலையில் இருந்து இறங்கி, தன்னைத் தாழ்த்த வேண்டியிருந்தது.

கிறிஸ்துவுக்குள் அன்புச் சகோதரிகளே! இதைப் படிக்கும் நாமும் கூட நாம் இருக்கும் நிலையிலிருந்து இறங்க வேண்டும். இறங்க வேண்டு மென்பது நம்மை தாழ்த்த வேண்டும் என்பதைக் குறிக்கிறது. நாம் எல்லாக் காரியங்களுக்காகவும் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து வண்டை போக வேண்டியுள்ளது. அவர் மூலமாய் நாம் பிதாவிடம் வேண்டிக் கொள்வதை நமக்குக் கொடுப்பார். இங்கு அக்சாள் கீழே இறங்கி தன்னைத் தாழ்த்துகிறாள். தேவனுடைய கண்களில் கிருபையும், தயவும், இரக்கமும், நன்மையும் கிடைக்கவேண்டுமானால் நாம் நம்மை தாழ்த்த வேண்டும். அநேக சமயங்களில் நாம் நம் மனதை மிகவும் கடினப் படுத்திக் கொள்கிறோம். தேவனுடைய வசனம் நம்மை எச்சரிக்கும் போது, நாம் செய்ய வேண்டும் என்று கூறும் போது நம்முடைய உள்ளத்தை திறந்து அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். வசனத்திற்கு எதிர்த்து செயல் படுகிறோம். உலகம், ஆசை, பாரம்பரியம் போன்ற காரியங்கள் இன்று அநேகருடைய இருதயங்களில் குடிகொண்டிருக்கிறபடியால் தங்களைத் தாழ்மைப்படுத்தி வசனங்களை ஏற்றுக்கொள்வதில்லை. இவைகளை விட்டு இறங்கி, வாடாத ஜீவ கீரிடத்தைப் பெற்றுக்கொள்ள நாம் கடைப் பிடிக்க வேண்டிய வழிமுறைகளை வசனத்தில் தேடிப் பார்க்க வேண்டும். வசனம் தான் நம்மைக் கடைசி நாட்களில் நியாயந்தீர்க்கப் போகிறது (யோவான் 12:48). ஆகவே, தேவனிடத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் தாங்கள் இருக்கிற, தாங்கள் கடைப்பிடித்த மனிதக் கோட்பாடுகளிலிருந்து விலகி, தங்களைத் தாழ்த்தி வசனத்திற்கு செவி கொடுக்க வேண்டும்.

## II. அக்சாள் விண்ணப்பம் செய்தாள்

விண்ணப்பம் என்பது கெஞ்சிக் கேட்பது. தன் தகப்பனிடத்தில் எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும் என்று சொல்லி கெஞ்சிக் கேட்கிறாள். வறட்சியான நிலத்தைத் தந்தீர். நீர்ப்பாய்ச்சலான நிலங் களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்.

இன்று அநேகருடைய வாழ்க்கையைப் பார்ப்போமானால் வறட்சியான நிலை காணப்படுகிறது. பிரயோஜனமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டுள்ளார்கள். தனக்கும், தன் குடும்பத்திற்கும் எந்த ஒரு நன்மையும் ஈட்டாமல் வறண்டு போன ஜீவியத்தை மேற்கொண்டுள்ளனர். ஆவிக்குரிய வாழ்க்கையிலும், சரீர வாழ்க்கையிலும் வறட்சி. நீர்ப் பாய்ச்சலான நிலங்களைப் போன்று வளமையான வாழ்வு கிடைக்க வேண்டுமானால் தேவனிடம் போய் கெஞ்சி ஜெபிக்க வேண்டும். தாசனாகிய மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காகத் தேவனிடம் மன்றாடும் போது கெஞ்சிப் பிரார்த்தித்தான். இன்று அநேகர் விண்ணப்பம் செய்யாமலே தாங்கள் ஆசீர்வாதமாக வாழ வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். இங்கு அக்சாள் விண்ணப்பம் செய்கிறாள். அதைப் போல் நாமும் தேவனிடம் எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும் என்று விண்ணப்பம் செய்வோம்.

## III. அக்சாள் பெற்றுக்கொண்டாள்

தன் மகள் உரிமையோடு தன்னிடம் விண்ணப்பித்ததைக் கேட்ட தகப்பனாகிய காலேப் அவளுக்கு மேற்புறத்திலும் கீழ்புறத்திலும் நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தார். கேட்டதை விட அதிகமாகப் பெற்றுக் கொண்டாள்.

இங்கு ஜெபத்தின் மூலமாக கிடைக்கும் நன்மைகளைக் கவனித்தோம். வேதாகமத்தில் நிறைய வாக்குத்தத்தங்கள் நிரம்பி இருக்கிறது. அவைகளைப் பற்றி..... மகா மேன்மையும். அருமையுமான வாக்குத்தத்தம் (1 பேதுரு 1:4) என்று பார்க்கிறோம். இவ்வளவு சிறப்பான வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்று அனுபவிக்க வேண்டுமென்றால் நாம் அவருடைய சொந்தப் பிள்ளைகளாய் மாற வேதாகமம் சொல்லுகிறபடி செய்யவேண்டும். வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து பின்பு ஞானஸ்நானத்தின் மூலமாக அவருக்குக் கீழ்ப் படிந்தால் தேவனுடைய பிள்ளைகளாய் மாறுபோம். அப்பொழுது பரலோக பாக்கியம் என்ற ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

ஆகவே பிரியமானவர்களே, இந்த அக்சாள் நமக்கு மூன்று பாடங்களை கற்றுக் கொடுத்திருக்கிறாள். இவளைப் போல நம்மை தாழ்மைப்படுத்தி, விண்ணப்பித்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் வரும் புதிய ஆண்டிலே பெற்றுக்கொள்வோம்.

## நாளும், நடப்பும்

1. எபோலா பலி எண்ணிக்கை 6,583 ஆக அதிகரிப்பு - உலக சுகாதார அமைப்பு.
2. தமிழகத்தில் மீண்டும் மின் கட்டண உயர்வு
3. ஆளில்லா விண்கலத்துடன் இம்மாதம் ஏவப்படுகிறது GSLV Mac-3 ராக்கெட்
4. ஒன்பதாவது உலகத் தமிழ் ஆதிராய்ச்சி மாநாடு மலேசியாவில் ஜனவரி 29ல் தொடக்கம்.
5. தமிழகத்தில் குடும்ப அட்டையில் உள்தாள் ஒட்டும் பணி நியாயவிலை கடைகளில் தொடங்கியுள்ளது.
6. இந்தியா ஆஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வாலிபர் பகுதி

# மாதிரியின் மாண்பு

**Bro. பென்னி மார்ட்டின்**

பிரியமான வாலிப கண்மணிகளே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நல்நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை மீண்டுமாக இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே! இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் திரைப்பட நட்சத்திரங்களை விளையாட்டு வீரர்களை, அரசியல் தலைவர்களை தங்கள் மாதிரிகளாக ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள். இதன் காரணமாக பல வாலிபர் களின் வாழ்க்கை அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறதை நம்மால் காணமுடியும். தேவனை நேசிக்கும் ஒருவருக்கு பிரபலமானவர் களுடைய மாதிரியெல்லாம் அவசியமே இல்லை. நாம்தான் அவர்களுக்கு மாதிரியாக இருந்து மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். நம் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்து வைத்துப்போன மாதிரியைப் பின்பற்றும்போது, நாம் மற்றவர்களுக்கு மாதிரியாக இருந்து நிர்மலமான வாழ்வை தொலைத்து நிராசையில் நிற்கும் பல வாலிபர்களுக்கு ஆதர்ச ஒளியை வீச முடியும். இருள் சூழ்ந்த இவ்வுலகில் சுவிசேஷமென்றும் ஒளியை வீசச் செய்து மாதிரிகளாக இருப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தமக்குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது " நீ வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என்று எழுதுகிறார் (1 தீமோ. 4:12). இங்கே வாலிபனாகிய தீமோத்தேயு மட்டு மல்ல வாலிபர்களாகிய நாம் ஒவ்வொருவரும் விசுவாசிகளுக்கும் இந்த உலகத்தாருக்கும் மாதிரியாக இருக்கவேண்டும் என்பதை தான் இது வலியுறுத்துகிறது. உண்மையாகவே நாம் எப்படி போதிக்கப்படுகிறோமோ அப்படியே நடக்க வேண்டும். நாம் அப்படிச் செய்யவில்லையென்றால் நம் கிரியைகளினிமித்தம் தேவனுடைய நாமம் துஷிக்கப்படும் (ரோமர் 2:17-24). இப்போது நாம் எவைகளிளெல்லாம் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டுமென்று ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**1. வார்த்தையில் மாதிரியாக இருக்கவேண்டும்**

நாம் ஒவ்வொருவரும் பேசுகிற வார்த்தைகளைக்குறித்து ஜாக்கிர தையாக இருக்க வேண்டும். நாம் தேவையற்ற வீணான வார்த்தை களைப் பேசக்கூடாது. நம் வார்த்தைகளை எல்லோரும் கவனிக்கிறார்கள் என்பதை உணர்ந்து பேச வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம், நம் வார்த்தைகளினாலே நீதிமான்கள் என்றும், குற்றவாளிகள் என்றும் தீர்க்கப்படுவோம் (மத்தேயு 12:37). எனவே, நாம் கேட்கிறவர்களுக்குப்

பிரயோஜனம் உண்டாகும்படி பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளையே பேச வேண்டும் (எபே. 4:29).

**2. நடக்கையில் மாதிரியாக இருக்கவேண்டும்**

வாலிபர்களாகிய நம்முடைய நடக்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமாக இருக்கவேண்டும் (பிலி. 1:27). இவ்வுலகத்தின் மக்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை மிக உயர்வாக கருதுகிறார்கள். அவர்கள் தத்துவஞானிகளின் உபதேசங்களை உதறித்தள்ளி விட்டு கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவி சாய்க்க வேண்டுமென்றால் நாம் அதற்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் தாறுமாறாக நடந்து கிறிஸ்துவின் உபதேசத்தை தூஷித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நல் நடக்கையினால் அநேகரை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற வாழ்க்கையை வாழவேண்டும். நாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார் (1 பேதுரு 1:16).

**3. அன்பில் மாதிரியாக இருக்க வேண்டும்**

நாம் அன்பில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். இங்கே அன்பை நாம் மூன்று விதமாகப் பிரிந்து விடலாம். ஒன்று நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்பு கூருவதில் சிறந்து விளங்கி அதில் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். இன்னொன்று நம் சகோதர சகோதரிகளிடத்தில் அன்பு கூருவதில் மாதிரியாக இருக்க வேண்டும். சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூர வேண்டும் என்று வேத வசனம் சொல்கிறது (1 பேதுரு 1:22). இதில் சத்துருக்களைச் சிநேகிப்பதும் உள்ளடக்கம், சத்துருக்களை சிநேகிப்பதென்பது உலகத்தின் மக்களால் முடியாத காரியம். என்வே, இதில் நாம் மாதிரியாக இருந்து விட்டால் கிறிஸ்துவத்தை நாம் உயர்த்திக் காட்ட முடியும். பாவத்தில் மரித்தவர்களை நாம் நேசித்து அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதினால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்கள் கழுவப்பட முடியும், அவர்கள் இவ்வுலகிலும் சிறந்த வாழ்க்கையை வாழமுடியும்.

**4. ஆவியில் மாதிரியாக இருக்க வேண்டும்**

இங்கே ஆவி என்பது மனநிலை அல்லது மனப்பான்மையை குறிக்கிறது. வாலிபர்களாகிய நாம் விட்டுக்கொடுக்கிற மனப்பான்மையைப் பெற்றிருக்கவேண்டும். இன்று வாலிபர்கள் மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அறவே இல்லை என்கிற குற்றச்சாட்டு எழுகிறது. அதே போல் நாம் மற்றவர்களிடத்தில் கரிசனை உடையவர்களாக காணப்பட வேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் (கலா. 6:12) சுருக்கமாகச் சொல்லப்போனால் நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வுலகில் காணப்படும் கூச்சல், குழப்பம், சண்டைகள், யுத்தங்கள் எல்லாவற்றிருக்கும் காரணம் கிறிஸ்துவின்

சிந்தை இல்லாததுதான். எல்லோருமே கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொணடால் இவ்வுலகம் எவ்வளவு அழகானதாக, இன்பமானதாக இருக்கும் !.

### 5. விசுவாசத்தில் மாதிரியாக இருக்க வேண்டும்

நம்முடைய விசுவாசம் பிறர் தேவனிடத்தில் விசுவாசமாயிருப் பதற்கு தூண்டுகோலாக அமைய வேண்டும். விசுவாசம் என்பது எபிரெயர் 11:1ன்படி நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது தேவ தாசர்கள் தேவன் மீது விசுவாசம் வைத்து வாழ்ந்தார்கள் என்று பார்க்கிறோம். நம் விசுவாசம் பிறர் காணத்தக்கதாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்யும்போது அவர் நமக்குச் செய்த வாக்குத்தங்களையெல்லாம் நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் விசுவாசத்தினாலே தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப் பட்டுப்போனான் என்று பார்க்கிறோம் (எபிரெயர் 11:8). அப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் உடையவர்களாக இருக்கும்போது பிறர் அதைக் கண்டு தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதற்குத் தூண்டப்படுவார்கள்.

### 6. கற்பில் மாதிரியாக இருக்கவேண்டும்

வாலிபர்களாகிய நாம் எல்லாவிதத்திலும் நம் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று நாம் அறிந்திருக்கிறோம் (1 யோவான் 5:19). பாவம் நிறைந்த இவ்வுலகில் நம்மை நாம் கறைபடுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். எல்லாவித வேசித்தனத்துக்கும் நாம் விலகியோட வேண்டும். நாம் நம் செயல்களில் மாத்திரமல்ல எண்ணங்களிலும் சுத்தமாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்திற்குக் களங்கம் ஏற்படாமலிருக்க வேண்டுமென்றால், நம்மை நாம் எல்லாவிதத்திலும் சுத்தமாகக் காத்துக் கொள்ள வேண்டும். வாலிப வயதை வாட்டி வதைக்கும் பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு விலகியோட வேண்டுமென்று தேவன் நமக்குக் கட்டளை யிடுகிறார் (2 தீமோ. 2:22). நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (1 தெச. 5:23).

பிரியமான வாலிபர்களே ! மேற்சொல்லப்பட்ட ஆறுகாரியங்களில் நீங்கள் விசுவாசிகளுக்கும், இவ்வுலகத்தின் மக்களுக்கும் மாதிரியாக இருந்தால் பலரை கிறிஸ்துவுக்குள்ளாக உங்களால் வழி நடத்த முடியும். புறஜாதிகள் மத்தியில் தேவனுடைய நாமம் மகிமைப்படும். எனவே, தீவிரமாக நாம் செயல்பட்டு மற்றவர்களுக்கு மாதிரியைக் காண்பிப்போம். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென்.

✻

**உங்கள் யாவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !**

சிறுவர் பகுதி

# தேவ குமாரனுக்குச் செவிகொடுங்கள்!

தேவனுக்கும் எனக்கும் மிகவும் பிரியமான சிறுதம்பிகளே, தங்கைகளே, கள்ளம் கபடமில்லாத பிராயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களையெல்லாம் இவ்வருடத்தின் இறுதி மாதத்தில் இப்பகுதியின் வாயிலாக சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இச்சிறு பிராயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இச்சிறு பிராயத்தில் நாம் யாருக்கு செவி கொடுக்கிறோம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாயிருப்பதால் இம்மாதம், நாம் ஆவிக்குரிய விஷயத்தில் யாருக்கு செவி கொடுக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வோம் வாருங்கள்.

இயேசு ஆண்டவர் இப்பூமியில் இருந்த சமயம், ஒரு நாள் தனது மூன்று நெருங்கிய நண்பர்களோடு ஒரு மலைக்கு ஜெபிக்கும்படி போனார். இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கையில் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் தூங்கிவிட்டனர். அவர்கள் எவ்வளவு நேரம் தூங்கினார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் கண் திறந்த போது, அவர்கள் கண்களால் நம்ப முடியாத காட்சியைப் பார்த்தார்கள்! மோசேயோடும், எலியாவோடும் இயேசு பேசிக் கொண்டிருந்தார்! எனக்கண்பான, தம்பி தங்கைகளே! ஒன்றை நாம் மறக்கக் கூடாது. இயேசு இப்பூமியில் வாழ்ந்த போது, மோசே மரித்து 1600 ஆண்டுகள் ஓடிவிட்டது, எலியா மரித்து 700 ஆண்டுகள் கடந்து விட்டது. ஆனால், அவர்களிருவரோடும் அவர் காட்சி தந்தார்

எனக்கன்பானவர்களே! இதை நீங்கள் யோசித்தாவது பார்க்க முடிகிறதா? நாம் அங்கே இருந்திருந்தால் என்ன நினைத்திருப்போம்? பேதுருவும், நம்மைப்போல உணர்ச்சிவசப்பட்டு, குழம்பிப் போய் இயேசுவிடம், .....ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று, தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான். (லூக்கா 9:33) இந்த மகத்தான மூவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என பேதுரு நினைத்து இப்படி சொல்லியிருக்கிறான்.

இதற்குப்பின், இன்னும் ஆச்சரியமான காரியம் நடந்தது. ஒரு மேகம் அவர்களையெல்லாம் மூடியது. அந்த மேகத்திலிருந்து, இவர் என்னுடைய நேச குமாரன். இவருக்குச் செவி கொடுங்கள் (லூக்கா 9:35) என்று ஒரு சத்தமுண்டாயிற்று. பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய

மூவரும் தேவன் பேச கேட்டார்கள். அவர்களுக்கு அது அதிர்ச்சியாயிருந் திருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் அந்த சத்தத்தைக் கேட்ட பின், இயேசு மாத்திரம் நிற்பதைக் கண்டார்கள். இயேசுவும், ஆச்சரியத்தில் மூழ்கிய அந்த மூன்று நெருங்கிய சீடர்களும் மலையி லிருந்து கீழே இறங்கினார்கள்.

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த இச்சம்பவத்திலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? குறைந்தது இரண்டு பாடம் நமது கண்களுக்குத் தெரிகிறது. முதலாவது, மோசேயும், எலியாவும் மரித்து இவ்வுலகத்தை விட்டுப் போயிருந்தாலும் அவர்கள் இன்னொரு இடத்தில் உயிரோடு இருந்தார்கள் என்பதே அது. நாம் மரிக்கும் போது, நமது சரீரம் இப்பூமியில் புதைக்கப்படுகிறது. ஆனால், நமது ஆத்துமா தொடர்ந்து ஜீவிக்கிறது. ஒருநாளில், தேவன் ஒவ்வொருவரையும் மீண்டும் உயிரோடு எழுப்புவார். தேவனைப் பிரியப்படுத்தும்படி வாழ்ந்தவர்கள், தேவனோடு இருக்கும்படி எழுந்திருப்பார்கள், ஆனால், மற்றவர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவார்கள் (யோவான் 5:28,29). இயேசு, தம்மை பின்பற்றுகிறவர்களுக்காக ஒரு இடத்தை இப்பொழுது ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். (யோவான் 14:1-4).

இரண்டாவதாக, இந்த நிகழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்னவென்றால், நாம் இன்று இயேசுவின் போதனைக்குத் தான் செவி கொடுக்க வேண்டும் என்பது. இயேசு வருவதற்கு முன் ஜனங்கள் மோசேக்கும், எலியாவை போன்ற தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுத்து கொண்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுது, நாம் தேவனுக்குப் பிரியமாக இருக்க விரும்பினால் இயேசுவை நம்பி, அவருடைய போதனையைப் பின்பற்ற வேண்டும். தேவன், நாம் அவருடைய குமாரனுக்கு செவிகொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆகவே, இச்சிறுபிராயத்தி லிருந்தே இயேசு ஆண்டவருக்கு செவிகொடுப்போம். இயேசு ஆண்டவரின் உபதேசம் புதிய ஏற்பாட்டில் உள்ளது. தேவனுக்குப் பிரியமாக நடக்க இவைகளின்படி செய்வோம்.

## கனிகள்

- மனந்திரும்புதலுக்கேற்ற கனி (மத்தேயு 3:8)
- ஆவியின் கனி (கலாத்தியர் 5:22)
- நீதியின் கனி (எபிரெயர் 13:15)
- உதடுகளின் கனி (எபிரெயர் 13:15)
- நற்கிரியைகளாகிய கனி (கொலோசெயர் 1:10)

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

**Bro. J.H.** ஜேம்ஸ் ராஜகுமார் - சென்னை

அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் புதிய ஆண்டின் நல்வாழ்த்துகள் ! பரலோகத்தின் தேவதாமே வருகின்ற புதிய ஆண்டிலே உங்களை ஆசீர்வதிப்பாராக ! இந்த உலகத்தில் மனிதன் கண்டுபிடித்த மிகப் பெரிய பாவம் எது என்றால் அது தான் மதம் (Religion) என்று சென்ற இதழில் பார்த்தோம்.

இந்த உலகத்தில் மனிதகுலம் வளர்ச்சியடைந்த நாட்கள் தொடங்கி இந்நாட்கள் வரைக்கும் மனிதன் தன் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள தன்னுடைய எண்ணங்களையெல்லாம் செயல்படுத்த ஒரு வழியைத் தேடி கண்டுபிடித்தான் என்றால் அதுதான் மதம். மனிதன் மதத்தின் வாயிலாக தன்னுடைய ஆசைகளையும் அதைச் சார்ந்த நடக்கை களையும் கடவுள் என்கிற சாயம் பூசி செயல்படுத்தத் தொடங்கினான் அதுவே மதம் ஆயிற்று.

அன்றைய நாட்கள் தொடங்கி தேவனுடைய வழிக்கும் (மார்க்கத் திற்கும்), மனிதனுடைய வழிக்கும் மதத்திற்கும் போட்டி இருந்து கொண்டேயிருக்கிறது. இதில் மதமே அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. மார்க்கத்தை மக்கள் விரும்புவதில்லை. ஏனென்றால் மார்க்கம் கட்டுப்பாடு நிறைந்தது. ஆகையால், கட்டுப்பாடுகளோடு வாழ்க்கையைக் கொண்டு செல்வது மனிதனுக்கு இயலாத காரியமா யிருக்கிறது. இதைதான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து: *ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்* என்றார்.

நாம் கிறிஸ்து என்னும் மார்க்கத்திலே (கட்டுரையிலே) அடியெடுத்து வைக்கும் இந்த வேளையிலே தலையங்கத்தில் இருக்கக் கூடிய கிறிஸ்து வைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால், அப்போஸ்தலரான பவுல் பிலிப்பியருக்கு எழுதும் போது *கிறிஸ்து எனக்கு ஜீவன் , சாவு எனக்கு ஆதாயம்,* என்றார்.

கிறிஸ்துவானவர் சொன்னது, மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்கிறார் (மத். 16:26). இரு மாபெரும் கேள்வியை இயேசு கிறிஸ்துவானவர் மனித குலத்தின் முன் வைக்கிறார். அதில் ஒன்று ஜீவனுக்குரிய முக்கியத்துவம்: ஒவ்வொரு மனிதனுக்கும் ஜீவன் என்பது

வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. அதை இழந்து விடுவது என்பது அவன் அல்லது அவள் இந்த உலகத்தில் பிறக்காமல் இருப்பதே நலம் என்பதாகக் கூறுகிறார். மனிதன், லாபம் அல்லது நஷ்டம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் அவனுடைய யோசனை பூமிக்குரிய பணம், பொருள் மீது போகிறது. ஆனால், ஆவிக்குரிய நம்முடைய ஆத்துமாவிற்கும் ஒரு கணக்கை இயேசு கிறிஸ்து வைத்திருக்கிறார் என்பது அநேகருக்கு சிந்திக்கக் கூட நேரமில்லாத ஒரு கருத்தாயிருக்கிறது. இந்த உலகத்திலே ஒருவன் செல்வ சீமானாக வாழும் போது அவன் தெய்வத்தோடு தொடர்பு இல்லாதவனாக இருந்தால் அது தான் நஷ்டமான வாழ்க்கை. ஏனென்றால், அவனுடைய முடிவு வருத்தமும் சஞ்சலமுமா முடிவில்லாத நரகத்தின் வாழ்க்கையாக இருக்கும். ஆகையால், அடுத்த இரண்டாவது கேள்வியை இயேசுவானவர் கேட்கிறார் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்பது. தன் ஞானம் கல்வி அறிவு, திறமை போன்றவைகளைக் கொண்டு சம்பாதித்த பணம், பொருளினாலே இந்த ஜீவனை வாங்கமுடியுமா? என்றால் ஆது முடியாது என்பது அதன் பொருளாயிருக்கிறது.

ஆனால், கிறிஸ்து என்னும் மார்க்கத்தில் இருப்பவர்கள் ஜீவனுள்ள வர்களாயிருப்பது அவசியம். அவர்கள் ஜீவனுள்ளவர்களாக இருந்துதான் ஆக வேண்டும். அவர்கள் ஜீவனுள்ளவர்களாயிராவிட்டால் கிறிஸ்து என்னும் மார்க்கத்தில் அவர்கள் இல்லவே இல்லை. இதை ஆலோசித்துப் பார்க்கும் போது ஓர் உதாரணம் எனக்குள் வருகிறது. ஒரு மரம் உயிரோடு இருக்கிறது என்றால், அதின் வேர்கள் பூமியிலிருந்து தண்ணீரையும் சத்துக்களையும் உறிந்து கொள்ள வேண்டும். அது பூமியை அழுத்தமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அதேபோல் இலைகள் கிளைகள் சூரியனுடைய வெளிச்சம் மற்றும் வெப்பத்தால் வரக் கூடிய சத்துக்களை கிரகித்துக் கொள்ளவேண்டும். மேலும், காற்றிலிருந்து பிராண வாயுவை (ஆக்சிஜனை) எடுத்துக் கொண்டு கரியமில வாயுவை (கார்பன் - டை - ஆக்சைடை) வெளியேற்ற வேண்டும் பாதி நேரங்களில் கரிய மில வாயுவை எடுத்துக்கொண்டு ஆக்சிஜனை வெளிவிடும். அப்படி தொடர்ந்து செய்ய வேண்டும். அதில் ஏதாவது ஒரு பகுதி செயல்படா விட்டாலும் அந்த மரம் தொடர்ந்து வாழாது. வேர்கள் மண்ணை உறுதியாகப் பற்றிக் கொள்ளாவிட்டால் காற்றடிக்கும் போது சாய்ந்து விடாலம். பூமியிலிருந்து தண்ணீரையும் உரத்தையும் எடுத்துக்கொள்வதை நிறுத்திவிட்டால் சீக்கிரத்தில் அந்த மரம் காய்ந்து போகலாம். சூரிய வெளிச்சத்திலிருந்தும் காற்றிலிருந்தும் தேவையானதை எடுத்துக் கொள்ளாவிட்டால் அல்லது வெளியேற்ற வேண்டிய வேலையை செய்யாவிட்டால் அது உயிரற்றதாகி விடும். மரங்கள் பாதி நேரம் கரிய மில வாயுவை எடுத்துக் கொண்டு ஆக்சிஜனை வெளிவிடாவிட்டால் நாம் சுவாசிப்பதற்கு ஆக்சிஜன் இல்லாமல் போகும். இந்த செயல்கள் தொடர்ந்து நடந்தால் அந்தமரம்

உயிரேடு இருக்கிறது என்று அர்த்தம். இதையே தான் நம்முடைய உடலும் செய்கிறது. அப்படிச் செய்யும் போது நம்முடைய உடல் வாழ்கிறது.

ஆனால், ஆத்துமா வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவானவர் கூறுகிறார். மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (மத்தேயு 4:4). தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொல்வது ஜீவனோடு ஒரு மனிதன் வாழ வேண்டும் என்றால் அதற்கு தேவனுடைய வார்த்தை தான் உணவாக இருக்கிறது. அதுவும் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமானது என்பதை உறுதியாகக் கூறுகிறார். ஒரு மரத்திற்கு தண்ணீர், உரம், சூரியன் , காற்று தேவையானது போல மனித ஆத்துமாவிற்குத் தேவனுடைய வார்த்தைகளை உட்கிரகித்து தேவை யற்றவைகளை அகற்றி விட வேண்டும் என்பது அவசியமாயிருக்கின்றது. மேலும், இயேசுவானவர், யோவான் 6:63-ல் ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதாவது என்கிறார். தொடர்ச்சியாக இதில் ஆவி என்பது என்ன என்று விளக்குகிறார். நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது என்கிறார். கிறிஸ்துவின் வசனங்கள் தான் ஆவியாயும் அதுவே நமக்கு ஜீவனாயும் இருக்கிறது.

மேலும் யோவான் 12:50-ல் அவருடைய (தேவனுடைய) கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன் என்கிறார். இதிலிருந்து ஒரு திட்டத்தை நாம் தெளிவுபடுத்திக் கொள்கிறோம். மனிதனு டைய கட்டளைகள், பாரம்பரியங்கள், சடங்குகள் போன்றவைகள் நித்திய ஜீவனைக் கொடுப்பதில்லை. பிதாவின் கட்டளை தான் மனிதனுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறது. இந்த காரணத்துக்காகத் தான் கிறிஸ்து வானவர் தாம் சொந்தமாய் ஏதும் பேசவில்லை. மாத்திரமல்ல எந்த ஒரு மனித கற்பனைக்கும், பாரம்பரியத்திற்கும், சடங்குகளுக்கும் அவர் இணங்கி இடம் கொடுக்கவில்லை. அதேபோல கிறிஸ்து என்னும் மார்க்கத்தில் நாம் இருந்தால் அவரைப் போலவே தேவனுடைய வார்த்தைக்கு அல்லது கட்டளைக்குத் தவிர வேறொன்றிக்கும் இடங் கொடுக்கமாட்டோம்.

எபிரெய ஆசிரியர் தேவனுடைய வார்த்தையைக் குறித்து எழுதும் போது ஜீவனும் வல்லமையுள்ளதாயிருக்கிறது என்கிறார். (எபி. 4:12) ஜீவனோடும் தொடர்பில் இருந்து கொண்டு வாழுவது ஆகும். விசுவாசத் தோடு தேவனுடைய வார்த்தைகளுக்கு, கட்டளைகளுக்குக் கீழ்படிந்து தேவனுடைய பிரியமானவைகளைச் சிந்தித்து செய்து தேவையற்றவை களை அகற்றி அல்லது தொடாமல் வாழும்போது தேவன் நம்மோடு ஐக்கிய மாக இருப்பார் இது தான் ஜீவனோடு வாழுவது ஆகும். தேவனுடைய ஐக்கியத்தைப் பற்றி சொல்லுகிற இடத்திலே ஆனபடியினால், நீங்கள்

அவர்கள் நடுவிலிருந்து (உலகத்தாருடைய நம்பிக்கை மற்றும் நடக்கைகளிலிருந்து) புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். 2 கொரி. 6 :17 : ஏசா. 52 :11.

இப்படித் தேவனுக்காக, கிறிஸ்துவுக்காக, பரிசுத்த ஆவியானவருக்கா, பரலோகத்திற்காக, அங்கு வாழப்போகிற நித்தியமான (முடிவில்லாத) சந்தோஷமான வாழ்க்கைக்காக நம்மை ஆயத்தப்படுத்த வேண்டுமானால் முதலாவது நாம் அவர்களைப்பற்றி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நன்மைகளைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகையால், கிறிஸ்து சொன்னார், " *ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்* " என்றார் (யோவான் 17:3). நித்திய ஜீவனைப் பெற பிதாவையும், இயேசு கிறிஸ்துவையும் சரியாக அறிய வேண்டும் அடுத்த மாதம் தொடர்வோம்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

# யாக்கோபு நிருபத்தில் நாவு

1. அது ஒரு சிறிய அவயம் (3:5)
2. அது ஒரு நெருப்பு (3:6)
3. அது அடங்ங்காதது (3:8)
4. அது பொல்லாங்குள்ளது (3:8)
5. அது அநீதி நிறைந்தது (3:6)
6. அது பொய் சொல்கிறது (3:14)
7. அது மனுஷனைச் சபிக்கிறது (3:9)
8. அது விஷம் நிறைந்தது (3:8)
9. அது பெருமை நிறைந்தது (3:6)
10. அது கறைப்படுத்துகிறது (3:6)
11. அது ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறது (3:6)
12. அது தேவனைத் துதிக்கிறது (3:9)

# ஊறுகாயும், தேவபக்தியும்

**Bro. K. சேகர்.**

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். திருமறை ஆசானின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. பிரியமானவர் களே! இன்றைய மத உலகில் மக்கள் மனதில் தேவபக்தி என்பது வித்தியாச மான சிந்தனைகளில், வடிவங்களில் இருக்கிறது என்றால் அது மிகை யல்ல! ஆம் பிரியமானவர்களே இன்று தெய்வ நம்பிக்கையற்ற நாத்தி கர்களை நாம் தள்ளிவிட்டு கடவுள் நம்பிக்கை கொண்ட ஆத்திகர்களை மாத்திரம் கவனித்தால் அவர்களுக்குள் எத்தனை தோற்றங்கள், எத்தனை மாற்றங்கள் அல்லது மாறுபாடுகள் உள்ளன என்பதை அறியலாம். தெய்வீக நம்பிக்கையை வலியுறுத்தி எத்தனையோ காரியங் களில் ஒப்பிட்டுப் பார்த்திருப்போம், கேட்டிருப்போம். அந்த வகையில் ஊறுகாயையும் சேர்த்துப்பார்த்தால் நம்முடைய பக்தியில் நாம் எங்கே இருக்கிறோம் எதோடு இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும், எங்கே நின்றுகொண்டிருக்கிறோம் என்பதையும் நாமே அறிந்து கொள்ள முடியும். ஆம், வாசக அன்பர்களே, ஊறுகாயோடு நமது தேவ பக்தியை இணைத்துப் பார்ப்போமா என்ன இது? ஊறுகாயை உணவோடு இணைப்பர், தயிரோடு, மோரோடு இணைப்பர், அவ்வளவு ஏன், ஊறுகாயை மதுபானத்தோடு கூட இணைப்பர். ஆனால், பரிசுத்தமான தேவ பக்தியோடு இணைக்கலாமா? இது நியாயமா? என்று கேட்கலாம். ஆனால், இந்த ஊறுகாயைக் கொண்டு நமது பக்தியுணர்வு, தேவனைப் பற்றிய நமது இருதயத்தின் நினைவுகள், தேவனுக்கும் நமக்கும் இருக்கிற நெருங்கிய உறவு போன்றவைகளை அளவிடமுடியும். ஆம் இந்த ஊறுகாய் நிச்சயமாக நல்ல உந்துதலையும், நல்ல உணர்வுகளையும் உண்டாக்கும் என்று நம்புகிறேன்.

**ஊறுகாயும், விருந்தும்**

அழகான தோற்றம், அருமையான ருசி ! ஆனாலும் என்ன? பொதுவாக நமது நாட்டில் விருந்தோம்பல் என்பது தொன்றுதொட்டுத் தொடரும் பாரம்பரியம். அதுவும் நமது தமிழர்களின் விருந்தோம்பல் முறை என்பது மிகப்பெரிய பாரம்பரியம் மற்றும் அறம் நிறைந்த செயல். இன்று விருந்தோம்பல் முறை கொஞ்சம் மாறியிருக்கலாம். பொதுவாக விருந்தில் முதலாவது இலை, இரண்டாவது உப்பு, மூன்றாவது ஊறுகாய் வைக்கப்படும். இந்த ஊறுகாய் பல சுவையில் பல வகையில் காணப்படும். இந்த ஊறுகாய் பந்தியில் முதல் மூன்று இடத்தை எவ்விடத்திலும் பிடிக்கிறது. அந்த ஊறுகாய் அது நூறுகாய், ஊறுகாய் அதில் ஊறும்வாய். ஆம், ஊறுகாய் என்று சொன்னால், சொல்பவர் வாய், கேட்பவர் வாய் பார்ப்பவர் வாய், உண்பவர் வாய் ஊறும். இப்படி ஊறுகாய், ஊறும் வாய்

ஆகிவிடுகிறது. இந்த ஊறுகாய் விருந்தில் முக்கிய இடத்தைப் பிடித்தாலும், விருந்து புசிக்கிறவனுக்கும், அதற்கும் இருக்கிற தொடர்பு என்ன? சிலர் தொட்டுப் பார்த்து ருசியறிவர், சிலர் ரசித்துருசித்து புசித்து சுவைத்து மகிழ்வர். சிலர் அதைப் பார்ப்பதோடு சரி, சிலர் அதின் விருப்பமில்லா திருப்பர். இப்படியே இன்று பக்தி நிலையிலும் மனிதன் காணப்படுகிறான். சாமி மனசில இருந்தால் போதும் என்றும், ஒருவன் வேறொருவனைப் பார்த்து அவன் சாமியை வேறோடே பிடுங்கறான் என்றும், பண்டிகைக்கு மட்டும் கோவிலுக்குச் செல்வது என்று பல்வேறு நிலையில் உள்ளது சமுதாயம்.

## ஊறுகாயும், தேவபக்தியும்

புசிக்கிறவன் விரும்புகிறானோ இல்லையோ ஊறுகாயை விருந்தில் வைப்பது இயல்பு. அதை ஏன் எதற்கு என்று நாம் கேட்பதில்லை. அது வேண்டாம் என்று சொல்வதுமில்லை. அப்படியே தேவ பக்தியையும் நமது சிறுபிராயம் முதல் இருதயத்தில் ஊட்டி விடுகின்றனர். அதை அப்போது ஏன் எதற்கு நாம் கேட்பதில்லை. நமக்குப் பக்தியை ஊட்டுகிற வர்கள் நல்லவர்களா, பக்தியுள்ளவர்களா, அவர்கள் நம்பும் தெய்வம் உண்மையானதா, அவர்கள் சார்ந்திருக்கிற மதம் உண்மையானதா என்று நாம் கேட்பதில்லை. நாம் அறியாத வயதுக்கு அது சரியாக இருக்கலாம். தாய் சொன்னால் சரியாகத்தானிருக்கும், தந்தையின் கூற்று தவறாக இருக்காது என்றெல்லாம் நம்பினாலும், ஏன் எதற்கு எப்படி என்ற கேள்விகளைக் கேட்டறிந்து தன் பெற்றோர்கள் தாங்கள் பின்பற்றின காரியங்கள் உண்மையென்று உணர்வுப் பூர்வமாகச் சொல்லும் காரியத்தில் எவ்வளவு உண்மைகள் உள்ளன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் நம்புகிற தெய்வத்துக்கும், சிருஷ்டிப்புக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதை அறிய வேண்டும். இயற்கை அவைகளை அறிவிக்கிறதா, சரித்திரத்தில் அவைகளுக்குப் பங்குண்டா, விஞ்ஞானம் அவைகளைக் குறிப்பிடுகிறதா என்றும் அவர்கள் வணங்கும் சாமி பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற்பட்டவர்களா என்பதை உணர வேண்டும். ஆக்க, காக்க, அழிக்க அதிகாரம் படைத்தவர்களா என்றும், அவர்கள் நம்புகிற கொள்கைகள், கோட்பாடுகள், நன்னெறிகள் யாவும் தேவன் அருளியதா என்றும், அதற்குக் கீழ்ப்படியாவிட்டால் தண்டிக்கப் படுவது உறுதியா என்றும், அவர்கள் நம்புவது ஆவியாயிருக்கிற தேவனையா? அல்லது கற்பனையான வெறும் விக்கிரகத்தையா என்பதையெல்லாம் கேட்டால், அதற்கு உண்மையை அறிந்து உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் அவர்களுடைய வாயின் மொழி உண்மையாயிருக்க வாய்ப்புண்டு. ஆனால், இவை களைக் கேட்டறிந்து தேவபக்தியை வளர்த்துக்கொள்ள உனக்கு ஆசையுண்டா, அல்லது எனது குலம் என் குலதெய்வம் என்று சொல்லி குலம் கோத்திரம் சொல்வதைக் கேட்டு வீணானதைப் பின்பற்றுவாயா?

(எரேமியா 6:16). எங்க தாத்தா இந்த சாமியைத் தான் கும்பிட்டாரு. எங்கப்பா இந்தக் கோயில் தான் மொட்டை அடிச்சாரு, வருஷா வருஷம் இந்தக் கோயில்லதான் கொடா வெட்டி பொங்க வைப்போம், இன்னிக்கு வந்து திடீருன்னு எங்கள மாறச்சொன்னா எங்க சாமி கோவிச்சுக்காதா? சகோதரனே, உயிரில்லாத ஒன்று எழுத்து நடமாடமுடியாத ஒன்று உங்களை ஒன்றுமே செய்யமுடியாது (எரே 10:5,6) மாம்சத்தைப் பேணுவதும், சுத்தப்படுத்துவதுமா பக்தி, பாதையாத்திரையிலா பக்தி, மொட்டையடிப்பதிலா முக்தி, கற்பனை, பாரம்பரியத்தினாலே நாம் பரிசுத்தமாக முடியாது. எங்கே பாரம்பரியம் மேலோங்கி நிற்கிறதோ அங்கே தேவனுடைய கற்பனைகள் பின்னுக்குத் தள்ளப்படுகிது. ஏனென்றால், பாரம்பரியம் தேவனுடைய கற்பனையை மீறச் செய்கிறது. (ஏசாயா 29 :13; மத். 15:8). தேவனுடைய கற்பனையை மீறாத அளவுக்கு நம்முடைய பாரம்பரியம் இருந்தால் தப்பில்லை. (உ.ம்) உடை, உணவு, திருமணம்.

## ஓரமாய் வைக்கப்படும் ஊறுகாய் (தேவபக்தி)

விருந்தில் முதன்மைப்படுத்துவதைப்போல் நினைத்தும் ஓரமாய் வைக்கப்படுகிறது ஊறுகாய். அப்படியே பக்திக்குரிய வாழ்க்கையிலும் முதல்ல கோயிலுக்குப் போயிட்டு வந்துவிடலாம். முதல் பங்கு ஆண்டவருக்குத்தான், முதல் மாச சம்பளம் சாமிக்குத்தான், முதல்ல சர்ச்சுக்குப் போயிட்டு வந்துதான் மற்றதெல்லாம். இப்படி தேவனை முதன்மைப் படுத்துவதுபோல் தெரிந்தாலும், தேவன் நம்மில் ஓரமாய் நிற்கிறார் என்பது எத்தனை பேருக்குத் தெரிகிறது. ஆம், ஆசானின் வாசர்கர்களே எல்லாம் அவருதான் அவரைத்தான் மலபோல நம்பியிருக்கிறேன் என்று நாம் சொன்னாலும், நம்முடைய இருதயம் வேறுபடுகிறதே. தேவனோடு இணைந்து போகவில்லை! நம்முடைய இருதயம் எவ்வளவு விசுவாச முள்ளதாக இருந்தாலும், இருதயத்துக்குரியவர் ஓரமாகத்தானே நிற்கிறாரு. சபையிலும், உன்னுடைய பங்கு என்ன? ஓரமா நின்னுட்டு ஓடி விடுகிறாய். கோயிலுக்குப் போகும்போதுதான் சுத்தமா, பரிசுத்தமா போகணும், போயிட்டு வரும்போது சாக்கடையில் விழுந்து புரண்டு வந்தாலும் தப்பில்ல. இதுவல்லாம் என் கற்பனையா? இல்லை, உண்மை ஆம்! பேருந்தில் இருவர் பேசிக்கொண்டார்கள். ம்ஹீம் கிறிஸ்மஸ் வந்திருச்சு என்ன ஒன்றும் இல்லையா? ஏன் இல்ல எல்லாம் சர்ச்சுக்குப் போயிட்டு வந்து தான். ஆம், பிரியமானவர்களே இப்படி சர்ச்சுக்குப் போகும் போது பக்திப் பாடலோடு போறான், வரும்போது பரவசமூட்டும் பாட்டலோடு வருகிறான். சகோதரனே சிலர் நினைப்பது என்ன? சாமியெல்லாம் சாங்கியத்துக்குத்தான். தொழுகை எல்லாம் வெறும் சடங்குக்குத்தான். கிட்டப்போன முட்டப்பகை. என்னத்துக்கு வம்பு அதனால் தான் எட்ட நின்னு அப்ப, அப்ப எட்டிப் பார்த்துக்கிறேன். சகோதரனே பக்தி வாழ்க்கையில் ஓரமாய் நின்னு, பட்டும் படாமலும் நடந்து கொண்டால் தேவன் நம்மில் பாராமுகமாயிருப்பார். ஆகவே, ஆழமான தொழுகை அர்த்தமுள்ளதாக அமையட்டும் !...



# கெட்டுப்போன நல்ல குமாரன்

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்களே, இம்மாதத்தில் வீட்டிலிருந்து கொண்டே கெட்டுப்போன நல்ல குமாரனைப்பற்றி இயேசு கூறுவதை நாம் அறிந்து கொள்வோமாக!.

## I. வீடு

கெட்ட குமாரன் மனந்திரும்பி வீட்டுக்கு வந்தான். வீடு மகிழ்ச்சியாக கொண்டாடியது. அப்போது மூத்த குமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிற போது கீத வாத்தியத்தையும், நடனக் களிப்பையும் கேட்டு ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன் உம்முடைய சகோதரன் வந்தார். அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காக கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து அவனை வருந்தி யழைத்தான். அவன் தகப்பனுக்கு பிரதியுத்திரமாக இதோ இத்தனை வருஷ காலமாய் உமக்கு ஊழியம் செய்து ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும் என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியை யாவது கொடுக்கவில்லை. வேசி களிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப் போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்திரே என்றான். அதற்குத் தகப்பன் மகனே நீ எப்போதும் என்னோடிருக் கிறாய் எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது, உன் சகோதர னாகிய இவனோ மரித்தான் திரும்பவும் உயிர்த்தான். காணாமற் போனான் திரும்பவும் காணப்பட்டான் என்று சொன்னான் (லூக்கா 15:25-32) என்றார்.

மூத்த குமாரன் தன் தகப்பனோடு வாழ்ந்தான். ஆனால், அவரை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவன் வீட்டிலிருந்து கொண்டே பொறாமை, இரக்கமற்ற கெட்ட குமாரனாக இருந்தான். தன் தகப்பனிடத்தில் நல்ல குமாரனாகிய வேஷத்தைத் தரித்துக் கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய இருதயத்திற்குள் பல பாவங்கள் இருந்தன (மத். 15:19,20) அவள் இருதயத்தில் இருந்ததை வாய் சொல்லிற்று (மத். 12:34). வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப் போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் என்று சொன்னான். வீட்டிலே மூத்த குமாரன் கெட்டக்குமாரனாகக் காணப்பட்டான். இன்று வீடு என்பது சபை (1 தீமோத். 3:15) கர்த்தருடைய சபையில் இன்று அநேகர் நல்லவராக வேஷம் போட்டுக்கொண்டு இருதயத்தில் பொல்லாத சிந்தனைகளை வைத்துக் கொண்டு இருக்கின்றனர். அவர்கள் யாவரும் மனந் திரும்ப வேண்டும். கெட்டுப்போன நல்ல குமாரனாக இருக்கக்கூடாது. உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவோம் (மத். 5:37).

## II. மூத்த குமாரனின் குறைகள்

இவன் தனது தம்பிக்கு கிடைத்த வரவேற்பைக் கண்டு பொறாமை பட்டான். தனக்கு ஒரு ஆட்டுக்குட்டி கூட விருந்தாகக் கொடுக்கப்படவில்லையே என்று குறைபட்டான் (லூக்கா 15:29). பொறாமை எலும்புருக்கி (நீதி. 14:30).

பொறாமையினாலே நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பரிசேயர், வேதபாரகர் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தனர். (மத். 27:17) தொடர்ந்து யூதர்கள் பொறாமையினாலே சுவிசேஷத்திற்கு எதிராக செயல்பட்டனர் (அப். 5:17; 13:45) பரிசேயர், வேதபாரகர் போல இன்றும் சில நாமகரணக் கூட்ட சபை மக்கள் சத்தியத்தை அறிந்தும் அதை மறைத்து பொறாமையினாலே எதிர்க் கின்றனர். இவர்கள் யாவரும் தேவனுக்குக் கீழ்ப்படிவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அறிவாகிய திறவுகோல் சுவிசேஷத்தைப் பூட்டிப் போடுகின்றனர். (லூக்கா 11:52) கிறிஸ்துவின் சபையை ஏற்றுக் கொள்வதில்லை!

மூத்த குமாரன் சுய நீதி கொண்டவனாகக் காணப்பட்டான். இவன் வருடக்கணக்காக தன் தகப்பனுக்கு ஊழியம் செய்வதாகக் கூறுகிறான். (லூக்கா 15:29) அதுபோல பரிசேயர், வேதபாரகர் வருடக்கணக்காக நாங்கள் சத்தியத்தைப் போதிக்கின்றோம், உனக்கு இன்னும் ஐம்பது வயது ஆக வில்லை என்று இயேசுவிடம் கூறுகின்றனர் (யோவான் 8:57) இன்றும் சிலர் நான் பிறவி முதல் கிறிஸ்தவனாக இருக்கின்றேன் நான் ஏன் கீழ்ப்படிய வேண்டும்? என்று சொல்கிறார்கள். யாக்கோபு என்பவர் தனது குமாரன் யோசேப்பு மரித்து விட்டதாக முப்பது வருஷமாக நம்பிக் கொண்டு இருந்தார். ஆனால், அவர் உயிருடன் இருப்பதாகக் கூறும்பொழுது முதலில் அவன் நம்ப வில்லை பின்பு தான் நம்பினான் (ஆதி. 45:26,28) அதுபோல சிலர் முதலில் சத்தியத்தின் உண்மைகளை நம்ப மறுக்கின்றனர். இவர்கள் யாவரும் சுய நீதியுடையவர்களாகவே உள்ளார். இவர்கள் யாவருமே இரட்சிக்கப்பட தேவன் அழைக்கிறார் (ரோமர் 10:1-3) மூத்த குமாரன் சுயநீதி கொண்டவனாகக் காணப்பட்டான்.

## III. மனந்திரும்ப வேண்டிய நிலையில் இருந்தான்

மூத்த குமாரனின் செயல்பாட்டைக் கவனிக்கும் போது அவன் மனந் திரும்ப வேண்டிய நிலையில் காணப்படுகிறான். இயேசு கிறிஸ்து யூதர்களை மனந்திரும்பும்படியாகச் சொன்னார். (லூக். 13:3,5). அவர்கள் மனந்திரும்ப மறுத்தனர். காரணம் அவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற மனப் போக்கிலே இருதயம் கொழுத்திருந்தது (மத். 13:15). அவர்களைப் போலவே இன்றும் சில நாமகரணக் கூட்ட சபை மக்கள் மனந்திரும்ப மறுக்கின்றனர். இவர்கள் யாவரும் மனந்திரும்ப வேண்டும். அதுவே தேவனுடைய விருப்ப மாகும். (2 பேதுரு 3:9) கடந்த நாட்களில் சத்தியத்தை அறிந்தும் மனந் திரும்பாமல் இருந்து விட்டோம். இன்றோ மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் எங்கு முள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார் (அப். 17:30) இந்த வருடக் கடைசியிலே தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்றால் மனந்திரும்பி குணப்படுவோமாக (அப். 3:20) அதுவே பரலோகத்திலே மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் (லூக். 15:7).

# நீ உன் கடமையைச் செய்கிறாயா?

Bro. W.A. ஹோலி

" .....ஒவ்வொரு நாளின் கட்டளைப்படியே வித்தியாசமான வேலைகளைச் செய்வதற்கு ஆட்கள் ஏற்படுத்த வேண்டுவதின் முக்கியத் துவத்தை சாலமோன் ராஜா உணர்ந்திருந்தான் " (2 நாளா 8:14).

தேவ மகிமையை அதிகரிக்கச் செய்வதாகவே எல்லாக் கடமை களும் உள்ளது. " *ஆகையால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய் யுங்கள்* " என்று கொரி. 10:31-ல் வாசிக்கிறோம். ஆகையால், தேவனு டைய மகிமைக்கு விரோதமாக ஒருவனுடைய காரியங்கள் இருந்து விடக் கூடாது.

உங்களுடைய இரட்சகரும், என் இரட்சகருமாகிய இயேசு அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார் (லூக். 17:10). நம்முடைய கடமையைச் செய்வதற்கு நாம் விசேஷித்த பாராட்டுக்களை எதிர்பார்க்கக் கூடாது.

கடமையானது, நாம் செய்ய வேண்டியவைகளை உணர்த்து கிறது. மனிதனுடைய மனது இந்த விதமாகத்தான் அமைக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒரு காரியம் சரிதான் என்ற அபிப்பிராயம் வந்த மாத்திரத்திலேயே அந்தக் காரியத்தைச் செய்வதற்கு, நமக்கு சில பொறுப்புகள் உண்டென்பதை அங்கீகரிக்கிறோம்.

ஒருவனுடைய குறிப்பிட்ட உறவுகளினடிப்படையில் அவனுடைய கடமைகளை நாம் பகுக்க முடியும். நம்முடைய கடமைகளோடு சம்பந்தப் பட்ட சில உறவுகளை நாம் இங்கே பார்ப்போம்.

1. உனக்காக நீ செய்ய வேண்டிய கடமையுண்டு. உனக்கு நீ உண்மையாக இருக்கிறாயா? உன்னால் செய்ய முடிந்த மிகச் சிறந்ததைச் செய்கிறாயா? நீ உண்மையாகவே செய்ய விரும்பினால் அதைச் சிறப்பாகச் செய்ய முடியுமா? உன்னை அழிக்கக் கூடிய செயல்களையும் பழக்க வழக்கங்களையும் நீ செய்கிறாயா?.

குடிப்பழக்கம், விபச்சாரம், திருட்டு, போதைப்பொருள் உபயோகித்தல் போன்றவை ஒருவனுடைய சுய அழிவுக்கு வழி செய்கிறது. " செய்யா திருப்பாயாக " என்று பரிசுத்த எழுத்துக்களில் சொல்லப்பட்டவை. மனிதனின் நன்மைக்காக மீண்டும் எழுதித் தரப்பட்டுள்ளது (யாத். 20:1; ரோம 13:9-11).

2. உன் குடும்பத்திற்காகச் செய்ய வேண்டிய கடமையுண்டு. "*இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாம்சமாயிருப் பார்கள்*" (மத். 19:5; மாற்கு 10:6-7) நாம் ஒத்துக்கொள்கிறோமா இல்லையா தெரியாது. ஆனால், எல்லா மனித சமுதாயத்துக்கும் குடும்பம் தான் பெரிய அஸ்திபாரமாக உள்ளது. இன்றைக்குக் குடும்ப அமைப்பு, தெய்வ பயமற்ற, மனிதக் கோட்பாடுகள், நிறைந்த மக்களாலே ஆபத்துக்குள்ளாக் கப்பட்டிருக்கின்றது. தகப்பனோ, தாயோ இல்லாமலிருக்கிற ஆயிரக் கணக்கான பிள்ளைகளைக் கொஞ்சம் பாருங்கள். முடிவு என்ன? அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள், திருடுகிறார்கள், கொலைகாரர்களா கிறார்கள், சிறு வயதில் குழந்தை பெற்றுக்கொள்ளுகிறவர்களாகவும், சட்டத்தைப் புறக்கணிக்கிறவர்களாகவும் இன்னும் உலகத்தின் பிடியில் முழுமையாகச் சிக்கினவர்களாகவும் உள்ளனர். பெற்றோர்களே, நீங்கள் அடிப்படையான காரியங்களுக்குத் திரும்பப் போக வேண்டிய நேரம் வந்து விட்டது " (நீதி. 13:24,19;18:22;6.15; 23:13-14;29:15-17; எபே. 6:1-4; கொலோ 3:20-21).

பிள்ளைகள் நேசிக்கப்பட்டு கர்த்தருடைய வளர்ப்பிலும், சிட்சை யிலும் வளர்க்கப்பட வேண்டும் (நீதி. 22:6; எபே. 6:1-4). உதாரணமாக, இயேசு ஒரு தச்சு வேலைக்காரராகும்படியாக வளர்க்கப்பட்டார். பவுல், ஒரு கூடாரத் தொழில் செய்கிறவராக வளர்க்கப்பட்டார் (மத். 13:55; மாற்கு 6:3; அப். 18:7) ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருக்கும்படியாக அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, சோம்பேறித்தனம் ஒரு சாபமாகும். " சோம்பேறியின் மூளை பிசாசின் கேந்திரக் கிடங்கு".

3. நீ உன் தேசத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையுண்டு. நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப் படியுங்கள். மேலான, அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ் சரி, தீமை செய் கிறவர்களுக்கு ஆக்கினையும், நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ் சரி, கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷரு டைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.... எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள் " (1 பேதுரு 2:13-17).

4. ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் நீ ஆராதனைக்கென்று கூடி வருகின்ற பிராந்திய சபைக்கு நீ செய்ய வேண்டிய கடமையுண்டு. (ரோமர் 6:16; எபி. 10:24-25; அப். 20:7; 2:36-38, 42:12) புதிய ஏற்பாட்டு மாதிரி அங்கே கொடுக்கப்பட்டது. (1 தீமோ. 4:12; 1 பேது 2:21) புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளிலே கூடி

வந்தார்கள் (அப். 20:7) தங்கள் வருமானத்திலிருந்து கொடுத்தார்கள் (1 கொரி. 16:1-2) கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றார்கள் (2:42) கர்த்தரின் நாமத்தைத் துதித்துப் பாடி, ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டார்கள் (எபே. 5:19. கொலோ. 3:16; யாக்கோபு 5:13) தேவனுடைய வார்த்தையை வாசித்துப் படித்தார்கள் (அப். 2:42; 1 கொரி. 7:17:14- 37) ஜெபித்தார்கள் (அப். 2:42; 1 தீமோ. 2:1; 1 பேதுரு 3:7,12; வெளி. 5:8) ஒரு ஆராதனை வசனங்களின் படியாக இருக்க வேண்டுமானால் இந்த ஐந்து காரியங்களும் இருக்க வேண்டும். சகோதரர்களே, உங்கள் சபையை நீங்கள் தாங்காவிட்டால், வேறு யார் இதைச் செய்வார்கள்?

5. நீங்கள் சர்வ வல்லமையுள்ள தேவனுக்குச் செய்யும் கடமை களில் உங்கள் அயலகத்தாரும் சேர்க்கப்பட வேண்டும். நாம் பிறனில் அன்பு கூர வேண்டும். (மத்தேயு 22:37-40; மாற்கு 12:28-33) உங்கள் அயலகத்தாருக்கு நீங்கள் செய்ய வேண்டியவைகள் உண்டு. அவர்கள் நிமித்தம், பக்தி ரீதியிலான ஒரு சிறந்த முன்னுதாரணத்தை ஏற்படுத் துங்கள். தேவனுடைய சத்தியத்தை அவர்களுக்குப் போதியுங்கள் (II தீமோ. 2:2) நீங்கள் இருக்கின்ற நிலையிலே கர்த்தருக்காக வேலையை ஆரம்பியுங்கள். பணிபுரிகின்ற இடங்களிலோ, படிக்கும் இடங்களிலோ, மருத்துவமனைகளிலோ அதைச் செய்யுங்கள்.

ஒருவேளை, நீங்கள் இப்படிச் சொல்லுவீர்கள். என்னுடைய நண்பனுக்குப் போதிக்கின்ற அளவுக்கு வேதாகமம் எனக்குத் தெரியாது என்று, நீங்கள் கிறிஸ்தவர்களாவதற்கு என்ன செய்தீர்கள் என்று உங்க ளுக்குத் தெரியுமா? நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால், உங்கள் நண்பனுக்குப் போதிக்கின்ற அளவுக்கு உங்க ளுக்குத் தெரிந்திருக்கிறது என்று நாம் சொல்ல முடியும். உங்கள் வேதாகமத்தை திறவுங்கள் மத். 28:18-25; மாற்கு 16:15-16, லூக். 24: 46-47. அப். 2:36-38. இந்த வசனப்பகுதிகளை மனப்பாடம் செய்து உங்கள் நண்பனுக்கு அவைகளைப் போதியுங்கள்.

உங்கள் நண்பனின் இரத்தப்பழியை உங்கள் கையிலேந்திக் கொண்டு அந்த மகா நியாயத்தீர்ப்புக்குப் போக விரும்புகிறீர்களா? பவுல் இவ்விதம் கூறுகிறார். "*தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்த படியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும். நீங்கி நான் சுத்தமா யிருக்கிறதென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சியாக வைக்கிறேன்*" (அப். 20:26.27).

சுத்தமானவைகளையும், மாசில்லாத இருதயத்தையும் உடைய வர்களாயிருப்பதற்கு, தேவனுக்கு முன்பாக உங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். தேவனைச் சந்திக்க ஆயத்தப்படும்படி, விரும்புகிறவர் களுக்காக, இந்த வசனங்கள் எழுதப்பட்டுள்ளது. (ஆமோ. 4:12).

**12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.**
**தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.**
















**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:

TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:

TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014


# எங்களது இதர வெளியீடுகள்





சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்









## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |





## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**







இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor: S. Rajanayagam